The Asia Foundation

Improving Lives, Expanding Opportunities

# பயிற்சிக் கையேடு

## சமூக மூலதன மதிப்பீடு - INSPIRED

ஆசிய மன்றமானது, மாற்றமடைந்து வளர்ந்து வரும் ஆசியாவில் உள்ள வாழ்க்கை முறைகளை மேம்படுத்த உறுதி பூண்டுள்ள ஒரு இலாப நோக்கற்ற சர்வதேச மேம்பாட்டு அமைப்பாகும். தமது தலைமையகத்தை சென். பிரான்ஸிஸ்கோவில் கொண்டு அதனூடாக 18 ஆசிய நாடுகளில் தமது வலையமைப்பின் மூலம் ஆசிய மன்றமானது பல்வேறு வகையான இருதரப்பு மற்றும் பலதரப்பு மேம்பாட்டு முகவர், மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்று, பொது மற்றும் தனியார் கூட்டாளர்களுடன் பணிபுரிந்து வருகிறது.

அமெரிக்க மக்கள் சார்பாக, ஐக்கிய நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிறுவனமானது (ருளுயுஐனு) வெளிநாட்டில் [னநாயக விழுமியங்களை ஊக்குவித்து நிரூபிப்பதுடன் ஒரு சுதந்திரமானதுமான, அமைதியானதுமான மற்றும் வளமானதுமன உலகத்தை முன்னேற்றவும் உதவுகிறது. அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைக்கு ஆதரவாக, ருளுயுஐனு ஆனது ஐக்கிய நாடுகள் அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் பேரழிவுக்கான உதவிகளை கூட்டாண்மை, உயிரைக் காக்கும் முதலீடுகள், வறுமைக் குறைப்பு, [னநாயக ஆட்சியை வலுப்படுத்தல் மற்றும் மக்கள் மனிதாபிமான நெருக்கடிகளிலிருந்து வெளிவந்து அதன்பின்னரான அவர்களின் முன்னேற்றத்திற்கும் உதவுகிறது.

ஆசிய மன்றத்தின் ஐளேீஜசுநுனு திட்டக் குழுவின் புத்திக பெரேரா இந்த ஆவணத்தையும் சமூக மூலதன மதிப்பீட்டையும் தயாரிப்பதற்கான பொறுப்பை உடையவராவார்.

பதிப்புரிமை © 2019 USAID இனால் நிதியளிக்கப்பட்ட ஆசிய மன்றத்தின் ஐளேீஜசுநுனு திட்டம்.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பெறுநர் தவிர்த்து ஏனையவர்களுக்கு ஆசிய மன்றத்தின் அனுமதியின்றி விநியோகிக்கப்படக் கூடாது.

USAID

FROM THE AMERICAN PEOPLE

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| சமூக மூலதனம் - ஓர் அறிமுகம் | 1 |
| வரைவிலக்கணங்கள் | 3 |
| மாதிரித் திட்டம் மற்றும் மாதிரிக் கட்டமைப்பு வடிவமைப்பு | 5 |
| பொது அறிவுறுத்தல்கள் | 10 |
| கருத்துக் கணிப்புப் படிவம் | 18 |
| SCA க்கு பரிந்துரைக்கப்பட்ட பகுப்பாய்வுக் கட்டமைப்பு | 42 |
| விடய ஆய்வுகள் | 53 |

# I சமூக மூலதனம் - ஓர் அறிமுகம்

**வரலாறு மற்றும் பின்னணி**

சமூக வலைப்பின்னல்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அவை ஒவ்வொன்றுக்கும் அடித்தளமாக இருக்கும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளின் தன்மை ஆகியவை வளர்ச்சித் திட்டங்களின் நீடித்தலின் செயல்திறனை கணிசமாக பாதிக்கின்றன என வளர்ந்து வரும் செயலறிவு சார்ந்த சான்றுகள் கூறுகின்றன. (SCI முன்னெடுப்பு, WB குழு, ஏப்ரல் 2001). தரப்பட்ட சமூகத்தின் சமூக மூலதனமானது நிறுவனங்கள், தொடர்புகள், அணுகுமுறைகள் மற்றும் மக்களிடையே தொடர்புகளை நிர்வகிக்கும் மற்றும் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன (வு்ல்காக் மற்றும் நாராயண் 2000). எனவே, சமூக மூலதனத்தின் கருத்தை மூன்று பரிமாணங்களில் நோக்க முடியும்

- சமூக மூலதனத்தை கவனிக்கும் அலகு
- சமூக மூலதனத்தின் வெளிப்பாடு மற்றும்
- சமூக மூலதனத்தின் தாக்கம்

குறிப்பிடத்தக்க முதலீட்டின் தேவைப்பாட்டைப் போல (பணம் இல்லாவிடின், குறைந்தபட்சம் நேரம் மற்றும் முயற்சியின் அடிப்படையில்) சமூக மூலதனமானது மற்றைய வடிவங்களில் உள்ள மூதனத்துடன் பல ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொள்கிறது. அத்துடன், இது நீண்ட கால நன்மைகளை வழங்கும் ஒரு திரட்டப்பட்ட சொத்தாகும். ஆனால் இது உள்ளீடுகளின் அளவை அடிப்படையாகக் கொண்டு காலப்போக்கில் மதிப்புயர்வு மற்றும் மதிப்புக்குறைவு ஆகிய இரண்டின் காரணமாகவும் இது எளிதில் பாதிக்கப்படுகிறது. இருப்பினும், சமூக மூலதனமானது பெரும்பாலான மூலதனத்தைப் போலல்லாமலும், மனித மூலதனத்தைப் போலவும், பயன்பாட்டின் அடிப்படையில் விரிவடையலாம், அல்லது வேறுவிதமாகக் கூறினால், பயன்படுத்தப்படும் அளவுக்கு ஏற்றாற்போல் அதன் வலிமையும் தரமும் அதிகரிக்கும்.

சமூக மூலதனத்தின் பல்வேறுபட்ட அம்சங்களை அளவிடுவதற்காக பல கருவிகள் நிறுவப்பட்டுள்ளன்

- சமூக மூலதனத்தின் பரிமாணங்கள் (வான் டெத் 2003)
- சமூக மூலதன மதிப்பீட்டுக் கருவி அல்லது SOCAT (உலக வங்கி குழு 2004)
- சமூக மூலதன அளவீடு (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு 2013)
- லகாட்டம் வள சுட்டி (லகாட்டம், 2014)
- சமூக மூலதன கண்காணிப்பு (2017)

எவ்வாறாயினும், இவற்றில் பெரும்பாலானவை சமூக மூலதனத்தை ஒரு மெசோபூ (meso) மட்டத்தில் அளவிடுகின்றன, மேலும் சமூக மட்டத்தில் உள்ள தலையீடுகள் குறித்த மிகக் குறைந்தளவான பார்வையையே தருகின்றன.இது ஆசிய மன்றத்தின் சமூக மூலதன மதிப்பீட்டின் (SCA) கருத்துருவாக்கம் மற்றும் வடிவமைப்பிற்கு வழிவகுத்தது.

## சமூக மூலதன மதிப்பீட்டுக் கருவி

நம்பிக்கையின் அளவை மதிப்பீடு செய்தல், வலையமைப்புகளின் தரம் மற்றும் புவியியல் எல்லையொன்றினுள் வாழும் மக்களிடையேயான தொடர்புகளின் வலிமை என்பவற்றை மதிப்பிடுவதே சமூக மூலதன மதிப்பீட்டின் (SCA) நோக்கமாகும். மேலே நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவைப் பயன்படுத்தி, வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளுக்குள் உள்ள சமூகங்கள் மோதல்களின் போது எவ்வாறு எதிர்ச்செயலாற்றும் மற்றும் இந்தப் பகுதிகளில் மோதல்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக நம்பிக்கை, வலையமைப்புகள் மற்றும் உறவுகள்; தொடர்புகள் எவ்வாறு பலப்படுத்தப்படலாம் என்பதை புரிந்துகொண்டு வெளிக்கொண்டு வர SCA முயற்சிக்கும்.

SCA ஐ நிர்வகிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான நுண்ணறிவுத் திறனானது கொள்கை வகுப்பாளர்களுக்கும் பிற அரசு சாரா மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் இலக்காகக் கருதப்படும் பகுதிகளில் காணப்படும் அடிப்படையான இன-மத இயக்கவியலைப் புரிந்துகொள்ள உதவும். இது அவர்களுக்கு அமைதியைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், இடைக்கால நீதி; நிலைமாறு கால நீதி மற்றும் மோதல்களை மட்டுப்படுத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளை வடிவமைப்பதற்கு உதவியாக இருக்கும்.

சமூக மூலதன மதிப்பீடானது பதினாறு துணைக் கூறுகள் மற்றும் தொகுப்புக்களைக் கொண்டுள்ளது

1) இன-மத வேறுபாடு பற்றிய விழிப்புணர்வு
2) வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோருக்கான (இன-மத) சம வாய்ப்பு
3) இனவாதம் மற்றும் மதவாதம்
4) இன-மத சகிப்புத்தன்மை
5) இன-மத முன்னோக்குகள் தொடர்பான பரஸ்பரம்
6) தனிப்பட்ட நம்பிக்கை தொடர்பான இன-மத முன்னோக்குகள்
7) நிறுவன நம்பிக்கை தொடர்பான இன-மத முன்னோக்குகள்
8) அக்கம்பக்கத்தின் பாதுகாப்பு தொடர்பான இன-மத முன்னோக்குகள்
9) வணிக உறவுகளின் நம்பிக்கை தொடர்பான இன-மத முன்னோக்குகள்
10) தன்னார்வத் தொண்டு தொடர்பான இன-மத முன்னோக்குகள்
11) தொண்டு தொடர்பான இன-மத முன்னோக்குகள்
12) சமூக வலைப்பின்னல் பங்கேற்பு
13) உணர்ந்து கொள்ளப்பட்ட சமூக வலைப்பின்னல்களின் நன்மைகள்
14) சமூகத்திற்குள் விறுவிறுப்பாகச் செயல்படுவது
15) சார்பு பகுப்பாய்வு
16) கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் - ஆநுடு (நிகழ்ச்சி தொடர்பானது)

# வரைவிலக்கணங்கள்

**பிரதேசம்**

கருத்துக் கணிப்பு நிர்வகிக்கப்படும் பகுதி. இது பின்வருவனவற்றுள் பொதுவாகக் காணப்படும்

- கிராம சேவகர் பிரிவு (GN)
- தேர்தல் வட்டாரம்
- உள்ளூார் அதிகார சபை
    - மாநகர சபை
    - நகர சபை
    - பிரதேச சபை
- பிரதேச செயலகம் (DS)
- மாவட்டம்
- மாகாணம்
- நாடு

**கருத்துக் கணிப்பாளர்**

இவரே கருத்துக் கணிப்பை நிர்வகிக்கும் நபராவார்.

பதிலளிப்பவர் (பங்கேற்பாளர்)

கருத்துக் கணிப்பாளர் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வீட்டு உறுப்பினராவார்.

**சுய வேலைவாய்ப்பு**

முறையான அல்லது முறைசாரா விநியோகச் சங்கிலியின் ஒரு பகுதியாக சுயாதீனமாக வேலை செய்தல். இதில் தனிப்பட்ட வர்த்தகர்கள், பகுதி நேர பணியாளர்கள், தொழிலாளர் மற்றும் பொருட்களை விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்தக்காரர்கள் போன்றவர்கள் அடங்குவர்.

**மாணவர்**

முழுநேர படிப்பில் ஈடுபடும் ஒரு நபரே ஒரு மாணவராக வரையறுக்கப்படுகிறார். சில மாணவர்கள் பகுதிநேர வேலையிலும் ஈடுபடலாம்..

**இல்லத்தரசி அல்லது இல்லத்தரசன்**

ஒரு இல்லத்தரசி அல்லது இல்லத்தரசன் எனப்படுபவர் வேலையில்லாத அல்லது வேலை தேடாத ஆனால் வீட்டு வேலைகளுக்கு தங்கள் நேரத்தை அர்ப்பணித்துள்ள ஒரு தனிப்பட்ட குடும்ப உறுப்பினராக வரையறுக்கப்படுகிறார்.

**பிரிந்து சென்றவர்**

தற்போது சட்டபூர்வமாக திருமணமான ஆனால் வாழ்க்கைத் துணையைத் தவிர்த்து பிரிந்து வாழும் ஒரு நபரை இது குறிக்கிறது.

**விவாகரத்தானவர்**

சட்டபூர்வமாக திருமணமான ஒரு நபர் அவரது வாழ்க்கைத் துணையிடமிருந்து பிரிந்து செல்வதற்காக சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக பின்பற்றி பிரிந்து செல்வது.

கிராமிய அபிவிருத்திச் சங்கம் (RDS)

கிராமிய பெண்கள் முன்னேற்றச் சங்கம் (WRDS)

அரச சார்பற்ற நிறுவனம் (NGO)

**முறையான ∴ முறைசாரா அமைப்பு**

ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியினுள் பதிவு செய்யப்பட்ட அல்லது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் முறையான நிறுவனங்கள் எனப்படும். முறையாகப் பதிவு செய்யப்படாமலும் சட்ட அங்கீகாரம் இல்லாமலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக இருக்கும் மற்றும் சேவை செய்யும் நிறுவனங்கள் முறைசாரா நிறுவனங்கள் எனப்படும்.

**தெரியாது, சொல்ல முடியாது (DKCS)**

□தெரியாது ; கருத்து இல்லை எனப்படும் தெரிவானது DKCS (தெரியாது, சொல்ல முடியாது) எனவும் அறியப்படுகிறது. இது, மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட வேண்டும். பதிலளிப்பவர் ஒரு பதிலைக் கொடுக்கத் தவறினால் அல்லது கருத்துக் கணிப்பாளரால் மீண்டும் வலியுறுத்தப்பட்டு மற்றும் தெளிவுபடுத்தப்பட்ட போதிலும், கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே இது பயன்படுத்த முடியும்.


# மாதிரித் திட்டம் மற்றும் மாதிரிக் கட்டமைப்பு வடிவமைப்பு

**மாதிரியின் அளவு**

இலக்கு வைக்கப்படும் மக்கள் தொகையின் துணைக்குழுவே மாதிரி எனப்படும். இது பகுத்தறிவினடிப்படையிலமைந்த மற்றும் நியாயமான அளவு மற்றும் மக்கள் தொகையைப் பிரதிநிதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். பொருத்தமான மாதிரி அளவை மதிப்பிடுவது நிச்சயமாக கணக்கெடுப்பின் நோக்கங்களைப் பொறுத்தது.

SCA போன்றதொரு கருத்துக் கணிப்பை நிர்வகிப்பதற்கு ஒரு மாதிரித் திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் ஒரு மாதிரிக் கட்டமைப்பானது தேவைப்படும். இது பல காரணிகளில் தங்கியுள்ளது

- செல்லுபடியாகும் முடிவு தேவைப்படுகிறது
    - உள்ளக செல்லுபடியாகும் நிலை: ஆய்வு செய்யப்பட்ட மாறிகள் இடையேயான தொடர்புகளின் பொருள் விளக்கம் எவ்வளவு சரியானது
    - வெளிப்புற செல்லுபடியாகும் நிலை: இலக்காகக் கொள்ளப்பட்ட மக்களுக்கு கண்டுபிடிப்புகளின் பொதுமைப்படுத்தல் எவ்வளவு சரியானது
- புள்ளிவிவர துல்லியம் தேவை. புள்ளிவிவர துல்லியத்தின் அடிப்படையிலேயே மாதிரியானது தேர்ந்தெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகிறது
    - நம்பகத்தன்மை மட்டம்
    - நம்பிக்கை இடைவெளி அல்லது பிழையின் விளிம்பு நிலை
    - மக்கள் தொகையின் அளவு
- கண்டுபிடிப்புக்களின் போதுமான அளவு தகவல்கள்
- இலக்கு வைக்கப்படும் இருப்பிடத்தினுள் உள்ள சமூகங்களின் ஒருமைப்பாடு அல்லது பன்முகத்தன்மை
- சுற்றுச்சூழல் காரணிகள்
- நேரம் மற்றும் செலவுக் கட்டுப்பாடுகள் மற்றும்
- வாடிக்கையாளர் தேவைகள்




கண்டுபிடிப்புகள் பொதுமைப்படுத்தப்பட்டு இலக்காகக் கருதப்படும் குழுவானது கருத்துக் கணிப்பிற்கான மக்கள் தொகை என விபரிக்கப்படுகிறது. மேலும், நிர்வகிக்கப்படும் கருத்துக் கணிப்பிற்கான கருவி மற்றும்

கணக்கெடுப்பு ஆய்வின் நோக்கங்களைப் பொறுத்தும் மாறுபடும். மேலே ஆராயப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில், இலக்காகக் கருதப்படும் மக்களிடமிருந்து தொடங்கி, அணுகக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் புள்ளிவிவர ரீதியாக பொருத்தமான மாதிரி தேர்ந்தெடுக்கப்படும் வரை மாதிரிக் கட்டமைப்பானது கீழ்நோக்கிச் செல்லும், இது வாடிக்கையாளர் தேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்படும்போது திட்ட நேரம் மற்றும் செலவுக் கட்டுப்பாடுகளை பூர்த்தி செய்கிறது. கீழே தரப்படும் இரண்டு முறைகளையும் பயன்படுத்தி மாதிரியை முடிவு செய்யலாம்

- நிகழ்தகவு மாதிரி
- நிகழ்தகவு அல்லாத மாதிரி நுட்பங்கள்

**நிகழ்தகவு மாதிரி**; ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஆய்வில் பங்கேற்பதற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சமமான மற்றும் சுயாதீனமான வாய்ப்பை வழங்கும் எழுமாற்றான தேர்வு செயல்முறையைப் பயன்படுத்துகிறது. நிகழ்தகவு மாதிரி உத்திகளில் பின்வருவன அடங்கும்

- **எளிமை**

  ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியான மக்களிடமிருந்து எழுமாற்றான மாதிரியை வரையவும்

- **முறையான**

  மாதிரிக் கட்டமைப்பிலிருந்து ஒவ்வொரு n ஆவது நபரையும் முறையான மாதிரி உத்திகள் தேர்ந்தெடுக்கின்றன

- **அடுக்குகளாக அமைந்த**

  அடுக்குகளாக அமைந்த எழுமாற்றான மாதிரியானது, இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகைக்குள் துணைக்குழுக்கள் அல்லது பகுப்பாய்வு செய்யக்கூடிய அடுக்குகள் அவற்றின் பதில்கள் அல்லது நடத்தையில் கணிசமாக வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ள நிலையில் இருக்கும்போது பயன்படுத்தப்படுகிறது.

- **விகிதாசார**

  விகிதாசார மாதிரியானது அடுக்கடுக்கான எழுமாற்றான மாதிரியின் மாறுபாடாகும், மேலும் இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகையில் உள்ள துணைக் குழுக்களின் அளவு கணிசமாக மாறுபடும் போது பயன்படுத்தப்படுகிறது.

- **கொத்து**

  மாதிரியில் உள்ள ஒவ்வொரு நபரின் வகையையும் அடையாளம் காண்பது சாத்தியமற்றது அல்லது நடைமுறைக்கு மாறானதாக இருக்கும்போது கொத்து மாதிரி பயனுள்ளதாக இருக்கும். இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகை பரஸ்பர ஒரே மாதிரியான ஆனால் உள்நாட்டில் பன்முகத்தன்மை கொண்ட கொத்துகளாக பிரிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு கொத்துக்களின் எழுமாற்றான மாதிரியும் கருத்துக் கணிப்புக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

- **பன்மைக் கட்டம்**

  பிரதிநிதித்துவப்படுத்தும் எழுமாற்றான ஒரு மாதிரியைத் தேர்ந்தெடுப்பது பல கட்டங்களில் நடைபெறுகிறது. மேலும், இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகையின் கட்டமைப்பு, ஆர்வத்திலுள்ள பிரச்சினை மற்றும் குறிக்கோள்கள் போன்ற பல்வேறு அளவுகோல்கள் என்பன மாதிரியைத் தேர்ந்தெடுக்கும்போது கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**நிகழ்தகவு அல்லாத மாதிரி** நிகழ்தகவு மாதிரியைப் பயன்படுத்துவது நடைமுறையில் சாத்தியமில்லாத போது பயன்படுத்தப்படுகிறது. நடத்தையின் அடிக்கடி நிகழும் தன்மை அல்லது ஆர்வமானது மக்கள் மத்தியில் மிகக் குறைவாக இருக்கும்போது இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சிக்கு கணிசமான எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களைக் கண்டுபிடிப்பதற்காக இலக்காகக் கொள்ளப்படும் மூலோபாயம் அதிகமாகத் தேவைப்படுகிறது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் நிகழ்தகவு அல்லாத மாதிரி நுட்பங்களுள் பின்வருவன அடங்கும்

- **தற்செயலான**

  ஆய்வில் பங்கேற்க விரும்பும் எந்தவொரு பங்கேற்பாளரையும் ஆய்வின் மாதிரியாகத் தேர்ந்தெடுத்தல்.

- **சௌகரியமான / வசதியான**

  சௌகரியமான மாதிரியானது, அணுகக்கூடிய நபர்களின் தொகுதியைத் தேர்ந்தெடுக்கும். இம்மாதியானது பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதைப் பற்றிக் கவலைப்படாமல், முற்று முழுதாக வசதியின் அடிப்படையில் இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகையைத் தளர்வாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

- **நோக்கமுடைய**

  ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய மக்கள் தொகை அரிதாகவோ அல்லது கண்டுபிடிப்பதற்கு கடினமாகவோ மற்றும் ஆய்வுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நோக்கமுடைய மாதிரித் தெரிவானது ஆய்விக்கான மாதிரியாக குறிப்பிட்ட குழுக்களை இலக்காகக் கொள்வதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.



நடைமுறையில் உள்ள அரசியல் சூழல், பங்கேற்பாளர்களின் கல்வியறிவு நிலை, புவியியல் ரீதியாக மக்கள் தொகையை அணுகல், கருத்துக் கணிப்புக்களில் பங்கேற்றுவதற்கான விருப்பம் மற்றும் பங்கேற்பாளர்களால் ஊதியம் எதிர்பார்க்கப்படுவது போன்ற சிறிய மற்றும் பெரிய சூழல் காரணிகள் பெரும்பாலும் மாதிரிக் கட்டமைப்பின் கருத்துருவாக்கத்தைப் பாதிப்பதில் முக்கிய பங்கு வகிக்கலாம். அத்துடன் கருத்துக் கணிப்பின் போது பதிலளிக்கும் வீதத்தையும் பாதிக்கும். இது சரியாகக் காரணப்படுத்தப்படாவிட்டால், பதிலளிப்பு வீதத்தை கணிசமாகக் குறைப்பதோடு மட்டுமல்லாது, திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதான செலவு மற்றும் நேரம் என்பன மேலதிகமாக விரயமாக்கப்படும்.

வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில், அரசாங்கத்தால் பதிலளிக்க கட்டளையிடப்படாவிட்டால், இலங்கையில் வழக்கமான வீட்டு கருத்துக் கணிப்புகளுக்கு பதிலளிக்கும் வீதமானது சுமார் 10% முதல் 15% வரையே இருக்கும். கருத்துக் கணிப்பாளர் குழு அனுபவமற்றதாக இருந்தாலும்,

களச் சரிபார்ப்பு மற்றும் பிற்சோதனை போன்ற சரியான காப்புவிதிகள் இடம் பெறாவிட்டாலும், இந்தச் சிக்கல் மேலும் அதிகரிக்கிறது. இதன் விளைவாக, கணிசமான எண்ணிக்கையிலான சரிபார்ப்பு பிழைகள் ஏற்பட்டு தரவுகள் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கும். பொதுவாக, ஒரு களத்துக்கு செல்லும் குழுவின் அனுபவமின்மை காரணமாக 20% முதல் 30% வரையான சரிபார்ப்பு பிழைகள் காணப்படும். ஆய்வுக்காக சென்ற ஒவ்வொரு 100 வீடுகளிலும் 7 முதல் 12 பயனுள்ள கருத்துக் கணிப்புகள் மட்டுமே முடிக்கப்படுகின்றன, மேலும் இது, மாதிரிக் கட்டமைப்பை தீர்மானிக்கும்போது காரணியாக்கப்பட வேண்டும்.

## இடத்தைத் தெரிவு செய்தல்

சமூக மூலதன மதிப்பீட்டிற்கான இடத்தைத் தேர்வு செய்யும் செயல்முறையானது, இலக்காகக் கருதப்படும் பிராந்தியத்தில் கிடைக்கும் மக்கள் தொகை பற்றிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அமைந்தது. இது, பிராந்தியத்தில் உள்ள அரசியல் உயர் மட்ட மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் நிர்வாக தலைமைகள், பிராந்தியத்தில் உள்ள வணிகத் தலைவர்கள் மற்றும் தனியார் துறை கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு பிராந்திய ஆலோசனைக் குழுவைப் பயன்படுத்தி அரசியல் உணர்திறனுக்காக மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

அதிக இனக் கலப்பு மற்றும் உயர் தொழில்துறை அடர்த்தியின் அடிப்படையில் இலக்காகக் கருதப்படும் மாவட்டத்திற்குள் காணப்படும் அனைத்து பிரதேச செயலகங்களையும் தரவரிசைப்படுத்த, 2012 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்புத் தரவு மற்றும் இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மூலம் கிடைக்கும் 2017 ஆம் ஆண்டுக்கான தொழில்துறை மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவு என்பன பயன்படுத்தப்பட்டது. பின்னர், இரண்டு குறிகாட்டிகளின் கூட்டான தரத்தின் அடிப்படையில் ஒன்பது பிரதேச செயலகங்கள் பட்டியலிடப்பட்டு அவற்றின் அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் இறுதித் தேர்வை எடுக்க ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. ஒரு மாவட்டத்திற்குள் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் மாதிரியைப் பரப்புவது புள்ளிவிபர ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அதேநேரம், இது அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரதேச செயலகம் இலக்காகக் கருதப்படும் மாவட்டத்திற்குள் SCA நிர்வாகத்திற்காக அனுபவபூர்வமாக தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்தது. அத்துடன், நேரம் மற்றும் செலவுக் கட்டுப்பாடுகள் காரணமாக வரையறுக்கப்பட்ட இலக்காகக் கருதப்படும் மாதிரியாக அதிக கவனம் செலுத்தப்பட்டு பிரதேச செயலக மட்டத்தில் மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டது.

i.e. SCA வுக்கான அம்பாறை மாவட்டத்துக்கான பிரதேச செயலக மட்டத் தேர்வு

| பி ரதசே சயெலக பி ரி வ | நி லை- நி ற வனங்களி ன எண்ணி ககை | நி லை- இணக கலப்பு | ம ெததம | உள்ளூ ர அதி கார சபை |
|---|---|---|---|---|
| ச்மமா்நதறை | 2 | 4 | 6 | ச்மமா்நதறைபி.ச. |
| ப ெத்ததவில | 8 | 3 | 11 | ப ெத்ததவில பி.ச. |
| கார ணீதவ | 14 | 1 | 15 | கார ணீதவ பி.ச. |
| க்லமு ணை ம ஸ்லிம | 1 | 14 | 15 | க்லமு ணை ந.ச. |
| தகெி ய்ததகண்ணடிய | 5 | 11 | 16 | தகெி ய்ததகண்ணடிய பி.ச. |
| அ்மபாறை | 4 | 12 | 16 | அ்மபாறைந.ச., நாம்ல ஓயா பி.ச. |
| க்லமு ணை தமி்ழ | 11 | 5 | 16 | க்லமு ணை ந.ச. |
| அ்டடாளஞ்சசனேை | 10 | 7 | 17 | அ்டடாளஞ்சசனேை பி.ச. |
| நாவி தன்வளி | 16 | 2 | 18 | |
| நி்நதவூ்ர | 9 | 9 | 18 | |
| அ்ககர ஷ்பற்ற | 6 | 15 | 21 | பட்டியலிடப்பட்ட பிரதசே சயெலக பி ரி வ |
| ஆலயைடி வே்மப | 13 | 10 | 23 | |
| உ ஹணை | 3 | 20 | 23 | |
| இறக்காம்ம | 19 | 6 | 25 | |
| சாய்ந்தமர து | 7 | 19 | 26 | தரே்நதடெ ுக்கப்பட்ட பி ரதசே சயெலக பி ரி வ |
| பதி ய்ததலா வ | 15 | 13 | 28 | |
| லஹகல | 20 | 8 | 28 | |
| தமணை | 12 | 17 | 29 | |
| தி ர ககே ா்வில | 17 | 16 | 33 | |
| மஹி ோயா | 18 | 18 | 36 | |

# பொது அறிவுறுத்தல்கள்

## 1. வீட்டைத் தேர்வு செய்தல்

### a. செய்ய வேண்டியவை

- மாதிரிக் கட்டமைப்பை பூர்த்தி செய்யும் கிராம சேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை மதிப்பிடவும், சுற்றுவட்டாரத்தில் நடந்து செல்லவும் கருத்துக் கணிப்பை மேற்கொள்பவர்களை ஊக்குவிக்கவும்..
- வலது கை விதியைப் பின்பற்ற கருத்துக்கணிப்பாளர்களுக்கு அறிவுரை கூறுங்கள். கருத்துக்கணிப்பாளர்கள் கிராம சேவகர் பிரிவிலுள்ள ஒரு முக்கிய நில எல்லைக் குறியிலிருந்து(டுயனெஅயசம) தொடங்க வேண்டும். வலது புறத்தில் முதலாவதாக செல்லும் சாலையைப் பின்பற்றி, இறுதிவரை தொடர வேண்டும். தேவைக்கேற்ப வலது கை திருப்பங்களை எடுத்துக் கொள்ளுங்கள். சாலை ஒரு முட்டுச்சந்தில் முடிவடைந்தால், கருத்துக்கணிப்பாளர் மீண்டும் நில எல்லைக் குறிக்குச் செல்ல வேண்டும். பின்னர் , அருகிலுள்ள வலது புற சாலையைத் தேர்ந்தெடுத்து அதே செயல்முறையைப் பின்பற்ற வேண்டும்..
- கருத்துக்கணிப்பாளர் எதிர்கொள்ளும் தெருவின் வலது புறத்தில் முதல் வீட்டைக் கொண்டு கருத்துக் கணிப்பை செயல்படுத்த ஆரம்பிக்க அறிவுறுத்துங்கள்
    - இவை வெற்றிகரமாக நடைபெற்றால், அடுத்து வரும் மூன்று வீடுகளைத் தவிர்த்து, இடது புறத்தில் மற்ற வீட்டைத் தேர்ந்தெடுக்கவும்
    - இவை தோல்வியடையும் பட்சத்தில், வலது புறத்தில் உள்ள அடுத்த வீட்டுக்குச் செல்லுங்கள்..

### b. தவிர்க்க வேண்டியவை

- மக்கள் வசிக்கிறார்கள் எனும் அறிகுறிகளைக் காட்டாத வீடுகளுக்குள் நுழைவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- எச்சரிக்கைக் குறியீட்டுகளுடன் உள்ள வீடுகளுக்குள் நுழைவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்குள் நுழைவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- வணிகக் கட்டிடங்களாக மாற்றப்பட்டிருக்கும் வீடுகளுக்குள் நுழைவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- அரசாங்க அதிகாரிகளின் அல்லது அமைச்சர்களின் வீடுகளுக்குள் நுழைவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.

## 2. பதிலளிப்பவரைத் தேர்வு செய்தல்

### a. செய்ய வேண்டியவை

- கருத்துக்கணிப்பாளர்கள் ஒரு வீட்டுக்குள் நுழையும் போது அவர்களை வரவேற்கும் முதலாவது நபரிடம் தங்களை அறிமுகப்படுத்தும்படியும் தான் வந்த நோக்கம் பற்றியும் கூற அறிவுறுத்துங்கள். மேலும், அந்நபர் மாதிரிக்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்தாலும் செய்யாவிட்டாலும் கருத்துக்கணிப்பாளர் இதை பின்பற்ற வேண்டும்.

- கருத்துக் கணிப்பில் பங்கேற்க வீடுகளில் இருந்து தனிநபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அளவுகோல்களைப் பின்பற்றி பதிலளிப்பவரைத் தேர்வு செய்யுமாறு கருத்துக்கணிப்பாளர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

- தேவைப்படும் அடுக்கு ஒதுக்கீட்டை பூர்த்தி செய்ய பங்கேற்பாளரை உள்நோக்கத்தோடு தேர்ந்தெடுக்க கணக்கீட்டாளர்களுக்கு அறிவுரை கூறுங்கள். (இலக்காக கருதப்படும் மக்கள் தொகையின் அடிப்படையிலான முன்னரே தீர்மானிக்கப்பட்ட பாலின விகிதம் கருத்துக் கணிப்பில் பயன்படுத்தப்பட வேண்டும்.)

  அதாவது, பெண் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், கருத்துக் கணிப்புக்கு பதிலளிக்க தேவையான பங்கேற்புத் தேர்வு அளவுகோல்களை பூர்த்தி செய்யும் அவ்வீட்டைச் சேர்ந்த ஒரு பெண் உறுப்பினரை பரிந்துரைக்குமாறு கேளுங்கள்.

- பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களின் கலாச்சாரம் மற்றும் உள்ளூர் மரபுகளை மதிக்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.

- கருத்துக் கணிப்பில் பங்கேற்க ஒரு குறிப்பிட்ட வகையான தனிநபர்களை மட்டுமே ஏன் தேர்வு செய்ய முடியும் என்பதை தெளிவாகக் கூறவும், விளக்குவதற்கும் தேவையான நேரத்தை எடுக்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.

- கருத்துக் கணிப்பில் பங்கேற்பது என்பது ஒரு தன்னார்வ பயிற்சி என்பதையும், பங்கேற்பாளர்களுக்கு எந்த நேரத்திலும் கருத்துக் கணிப்பை நிறுத்த உரிமை உண்டு என்பதையும், அவர்கள் பதிலளிக்க வசதியாக இல்லாத கேள்விகளுக்கு பதிலளிக்கத் தேவையில்லை என்பதையும் விளக்குவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.

### b. தவிர்க்க வேண்டியவை

- கருத்துக்கணிப்பாளர் சந்திக்கும் முதல் நபரை கருத்துக் கணிப்பில் பங்கேற்பாளராக தேர்ந்தெடுப்பதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.

- வீடுகளில் ஆதிக்கம் செலுத்தும் நபர்களை அவர்களின் விருப்புக்கிணங்க பதிலளிப்பவர்களாக தேர்ந்தெடுக்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.

- கருத்துக் கணிப்பு மற்றும் அதன் நோக்கம் தொடர்பான உண்மைகளை தவறாகப் புரிந்துகொண்டு கூறுவதன் மூலம் வீட்டு உறுப்பினர்களை பங்கேற்பதற்கு வற்புறுத்த கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- கருத்துக் கணிப்பில் பங்கேற்பதற்கு பிரதியீடாக நிதி அல்லது நிதி அல்லாத சலுகைகளை தருவதாக வாக்களிக்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.

## 3. நேர்காணலை நடத்துதல்

### a. செய்ய வேண்டியவை

- களத்திற்குச் செல்வதற்கு முன்பு, சகாக்களிடையே கருத்துக் கணிப்பைப் பயிற்சி செய்ய கருத்துக்கணிப்பாளர்களுக்கு அறிவுரை கூறுங்கள்.
- பங்கேற்பாளருடன் பேசுவதற்கு அவர்களுக்கு மிகவும் வசதியான மொழியைப் பயன்படுத்த கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- முடிந்த வரை சிறப்பாக பங்கேற்பாளருக்கு கேள்விகளை விளக்குவதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக போதுமான நேரத்தை பங்கேற்பாளர்களுக்கு வழங்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- பங்கேற்பாளரிடமிருந்து நேரடியாக பதில்களைப் பெற கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- பங்கேற்பாளரின் பதில்களை முந்தைய பதில்களுடன் தர்க்கரீதியாக சரிபார்க்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- பங்கேற்பாளர் ஒரு பதிலை தன்னார்வத்துடன் தெரிவிக்க விரும்பவில்லை (DKCS தெரிவைப் பயன்படுத்தி - தெரியாது, விருப்பத்தை சொல்ல முடியாது) எனில், பங்கேற்பாளரை அந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டாம் என்று கருத்துக்கணிப்பாளர்களை அறிவுறுத்துங்கள்.

### b. தவிர்க்க வேண்டியவை

- கருத்துக் கணிப்பிலுள்ள கேள்விகளை விளக்குவதில் முன்னர் அங்கீகரிக்கப்படாத எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்த கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- ருத்துக் கணிப்பிலுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது ஒரு குறிப்பிட்ட திசையில் பங்கேற்பாளரை வழிநடத்த கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- பங்கேற்பாளருடன் தங்கள் சொந்த கருத்துக்களைப் பற்றி கலந்தாலோசிக்க கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.
- கருத்துக் கணிப்பை நிர்வகிக்கும் போது தேவையற்ற முறையில் பேச கருத்துக்கணிப்பாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டாம்.
- பெறப்பட்ட பதில் தெளிவாக இல்லாவிட்டால், பங்கேற்பாளர் பதில்களை விளக்க கேட்பதற்கு கருத்துக்கணிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டாம்.

## 4. பிற்சோதனை மற்றும் களச் சரிபார்ப்பு

### a. செய்ய வேண்டியவை

- கருத்துக் கணிப்பு நடைபெற்ற இடங்களை எழுமாற்றாக தேர்வு செய்து கருத்துக்கணிப்பாளர்கள் ஏற்கனவே சென்று வந்த இடங்களைப் பார்வையிடவும் மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் களச் சரிபார்ப்பை மேற்கொள்ளவும்.
- கருத்துக் கணிப்பில் பதில் போதவில்லை என்ற சாக்குப்போக்கில் பங்கேற்பாளர்களை அழைத்து பங்கேற்பு தொடர்பான பதில்களை தோராயமாக சரிபார்க்கவும்.
- பதில்களின் நேர்மையை உறுதிப்படுத்த அனைத்து பூர்த்தி செய்யப்பட்ட கருத்துக் கணிப்புகளிலும் தர்க்கரீதியான சரிபார்ப்புகளை உருவாக்கி இயக்கவும்.
- ஒதுக்கப்பட்ட எல்லைகள் மற்றும் பிற தொடர்புடைய அளவுகோல்கள் தொடர்ந்து பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு ஒவ்வொரு கருத்துக்கணிப்பாளரிடமிருந்தும் எழுமாற்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகளைச் சரிபார்க்கவும்.
- களச் சோதனைகளை மேற்கொள்ளும் போதும் பங்கேற்பாளர்களுடன் பிற்சோதனைகளை நடத்தும் போதும் கலாச்சாரம் மற்றும் சமூக விதிமுறைகளை மதிக்க வேண்டும்.
- களச் சரிபார்ப்புகளையும் பிற்சோதனைகளையும் மேற்கொள்ளும்போது சுருக்கமாகவும் துல்லியமாகவும் இருங்கள்.
- முரண்பாடுகள் கண்டறியப்படும்போது கருத்துக்கணிப்பாளர்களுக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குங்கள்.
- முரண்பாடுகள் அடிக்கடி கண்டறியப்படும்போது கருத்துக்கணிப்பாளர்களை அதிகமாக கூர்ந்து கவனியுங்கள்.

### b. தவிர்க்க வேண்டியவை

- கருத்துக்கணிப்பாளர்கள் முன்பு கருத்துக் கணிப்பிலீடுபட்ட வீடுகளில் களச் சோதனைகளை மேற்கொள்ளும்போது கருத்துக்கணிப்பாளர்களின் நம்பகத்தன்மையை குறைத்து மதிப்பிட வேண்டாம்.
- களச் சோதனைகளின் போது முரண்பாடுகள் கண்டறியப்பட்டால் பங்கேற்பாளரின் பதில்களை மாற்றுவதன் மூலம் கருத்துக் கணிப்பை பயன்படும்படி செய்ய வேண்டாம்.
- களச் சோதனைகளை மேற்கொள்ள முன்னரே அவற்றின் வகை மற்றும் இயல்பு ஆகியவற்றை கருத்துக்கணிப்பாளர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டாம்.
- களச் சரிபார்ப்பிற்காக வீடுகளைத் தேர்ந்தெடுப்பதை முன்கூட்டியே கணிக்க வேண்டாம்.

- களச் சோதனைகளை மேற்கொள்ளும்போது கருத்துக் கணிப்பின் பங்கேற்பாளர்களுடன் தேவையற்ற கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டாம்.
- கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் அல்லது முரண்பாடுகள் பற்றி கருத்துக் கணிப்பின் பங்கேற்பாளருடன் கலந்துரையாட வேண்டாம்.

## 5. தகவல் பதிவு

### a. செய்ய வேண்டியவை

- தரவை உள்ளிடும்போது ஒரு நிலையான முன் வடிவு ஒன்றைப் பின்பற்றவும்.
- நெடுவரிசை எண்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கேள்வி எண்கள் உள்ளிடப்படும் ஒரு பதிவேட்டை பராமரிக்கவும்.
- ஆவண எண்ணைப் பயன்படுத்தி பங்கேற்பாளர்களுக்கு குறியீட்டு எண்களை இடுங்கள். அத்துடன், பங்கேற்பாளரது பதில்களை உள்ளிடும்போது குறியீட்டு எண்களைப் பயன்படுத்தவும்.
- பங்கேற்பாளரது தகவல் மற்றும் குறியீட்டு எண்ணைப் பதிவு செய்வதற்கு தனியான தரவுப் பதிவுத் தாளைப் பராமரிக்கவும்.
- ஒவ்வொரு தனித்தனியான கேள்விக்கும் ஒரு புதிய நெடுவரிசையை உருவாக்கவும்.
- ஒரு கேள்விக்கு துணைக் கூறுகள் இருக்கும்போதும் புதிய நெடுவரிசைகளை உருவாக்கி, முக்கிய கேள்வி எண்ணின் தசமங்களைப் பயன்படுத்தி அவற்றுக்கு எண்களை இடுங்கள்.

  உதாரணமாக, கேள்வி 10 இல் 5 துணை கேள்விகள் இருந்தால், 10.1, 10.2, 10.3, 10.4 மற்றும் 10.5 என்ற 5 நெடுவரிசைகளைப் பயன்படுத்தி தரவை உள்ளிட வேண்டும்.
- தரவு பதியப்படும்போது ஏற்படும் பிழைகளைக் குறைப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு முறையாவது தரவை சுயாதீனமாக சரிபார்க்கவும்.
- முடிந்தவரை காப்புக் கோப்புகளை பராமரிக்கவும்.

### b. தவிர்க்க வேண்டியவை

- பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்படும் தரவுத் தொகுப்பில் பங்கேற்பாளர்களை தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய தகவலை உள்ளிட வேண்டாம்.
- தரவின் வெவ்வேறு பகுதிகளை உள்ளிடுவதற்கு தரவைப் பதியும் வெவ்வேறு நபர்களைப் பயன்படுத்த வேண்டாம்.
- பங்கேற்பாளரின் தகவல் அடங்கிய தரவுத் தொகுப்பையும் அவர்களின் பதில்களின் தரவுத் தொகுப்பையும் ஒரே இடத்தில் சேமிக்க வேண்டாம்.
- பங்கேற்பாளர் தகவல் கோப்பில் அங்கீகரிக்கப்படாத அணுகலை அனுமதிக்க வேண்டாம்.

## 6. தகவல் மதிப்பீடு

### a. செய்ய வேண்டியவை

- உள்ளிடப்பட்ட தரவுகள் மீது முன்னரே தீர்மானிக்கப்பட்ட தர்க்க ரீதியான சோதனைகளை சோதித்துப் பார்க்கவும்.
- கணிக்கக்கூடிய பதில்களின் வடிவங்களை உள்ளிடப்பட்ட தரவுகள் மீது சோதித்துப் பார்க்கவும்.
- பதில்களின் காகித நகலுக்கு எதிராக குறைந்தது 20% எழுமாற்றான தரவு உள்ளீடு சோதனைகளை செய்யுங்கள்.
- உள்ளீடு செய்யப்பட்ட பதில்களில் குறைந்தது 10% ஐ பங்கேற்பாளர்களுக்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலம் சரிபார்க்கவும்.
- பதில்களை சரிபார்ப்பதற்காக கருத்துக் கணிப்புகளை முடிப்பதற்கு மேலதிகமாக எடுத்துக்கொள்ளப்பட்ட நேரத்தைக் கவனிக்கவும்.

### b. தவிர்க்க வேண்டியவை

- தரவுகளை செல்லுபடியாக்கும் குழுவின் ஒரு பகுதியாக கருத்துக்கணிப்பாளர்களை இணைக்கக்கூடாது.
- தரவுகளை செல்லுபடியாக்கும் குழுவின் ஒரு பகுதியாக தரவுகளை உள்ளீடு செய்பவர்களை இணைக்கக்கூடாது.
- சாத்தியமான இடங்களில், தரவுகளை செல்லுபடியாக்கும் குழுவின் ஒரு பகுதியாக கள மேற்பார்வையாளர்களை இணைக்கக்கூடாது.
- கருத்துக் கணிப்புகளுக்கான பதில்களில் வடிவங்கள் அவதானிக்கப்பட்டால், அவைகளை முழுமையான பதில்களாக ஏற்றுக்கொள்ள வேண்டாம்.
- பங்கேற்பாளரது தகவல் கிடைக்காத இடங்களில் கருத்துக் கணிப்புகளின் பதில்களை ஏற்க வேண்டாம்.
- மாதிரி கட்டமைப்பிற்கு வெளியே காணப்படும் கருத்துக் கணிப்புகளின் பதில்களை ஏற்க வேண்டாம்.
- 50% க்கும் அதிகமான செல்லுபடியாகாத தரவுகளை அனுப்பும் கருத்துக்கணிப்பாளரிடமிருந்து தொடர்ந்து வரும் பதில்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்..
- குறைந்தளவு நேரத்தை எடுத்துக்கொண்ட கருத்துக் கணிப்புகளை ஏற்க வேண்டாம்.

## 7. பகுப்பாய்வு

### a. செய்ய வேண்டியவை

- பகுப்பாய்விற்கான வழிகாட்டியாக இங்கு சேர்க்கப்பட்டுள்ள பகுப்பாய்வு கட்டமைப்பைப் பயன்படுத்தவும்.

- தரவுகளை முடிந்தவரை புள்ளிவிபர ரீதியாக பகுப்பாய்வு செய்வதற்கு தொடர்புப் போக்குகள் (Regressions) பகுப்பாய்வு, அனோவா (Annova) பகுப்பாய்வு, இருமாறி (Bi-variate) பகுப்பாய்வு போன்ற பிற முறைகளைப் பயன்படுத்தவும்.
- கண்டறிவுகளின் இணைப்புக்களுக்கான விடய ஆய்வுகளை வரைவதற்கு பங்கேற்பாளர்களுடன் குழு விவாதங்களில் கவனம் செலுத்துதல், விடய வல்லுநர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடல் மற்றும் பங்கேற்பாளர்களுடனான ஆழமான நேர்காணல்கள் போன்ற தரமான முறைகளைப் பயன்படுத்தவும்.
- பகுப்பாய்வை மேற்கொள்ளும்போது போது முறையான நுணுக்கங்களை சரிசெய்ய நினைவில் கொள்க.
- முடிந்தவரை ஆய்வின் பின்னணியையும் சூழலையும் புரிந்துகொள்ள இருக்கின்ற எழுத்தாண்மைத் தொகுதியை மதிப்பாய்வு செய்யவும்.
- பகுப்பாய்வு செய்வதில் உள்ள நெருக்கடியான அனுமானங்களையும் கருதுகோளையும் தெளிவாகக் கூறுங்கள்.
- பெரிய அளவில் அடிக்கடி நிகழும் சூழல் காரணிகள் மற்றும் ஆய்வு முடிவுகளைப் பாதித்த சமீபத்திய சம்பவங்களை விளக்குங்கள்.

### b. தவிர்க்க வேண்டியவை

- குறிப்பிடத்தக்க தொடர்புகள் கூட காரண காரியத்தை நிரூபிக்கின்றன என்று கருத வேண்டாம்.
- ஒரு கருதுகோளை ஏற்பதற்காக ஒரு புள்ளிவிபர அளவைப் பயன்படுத்த வேண்டாம்.
- புள்ளிவிபர பகுப்பாய்வில் DKCS பதில்களைக் காரணிகளாக்க வேண்டாம்.
- முடிந்தவரை மைக்ரோசா.ஃப்ட் எக்செல் (Microsoft Excel) மென்பொருளை பகுப்பாய்விற்கு பயன்படுத்த வேண்டாம்.

## 8. விளக்கம் மற்றும் பொதுமைப்படுத்தல்

### a. செய்ய வேண்டியவை

- பகுப்பாய்வை மேற்கொள்ளும்போது செய்யப்பட்ட முக்கியமான அனுமானங்கள் மற்றும் கருதுகோள்களை விளக்குங்கள்.
- பெரிய அளவில் அடிக்கடி நிகழும் சூழல் காரணிகள் மற்றும் ஆய்வு முடிவுகளைப் பாதித்த சமீபத்திய சம்பவங்களை விளக்குங்கள்.
- தரவைப் பொதுமைப்படுத்தும் போதும் விளக்கும் போதும் ஆய்வின் நோக்கத்தை நினைவில் கொள்ளுங்கள்.
- தரவைப் பொதுமைப்படுத்தும் போதும் விளக்கும் போதும் மாதிரிக்கான வரம்புகளை நினைவில் கொள்ளுங்கள்.

**b. தவிர்க்க வேண்டியவை**

- தரவைப் பொதுமைப்படுத்துவதற்கும் விளக்குவதற்கும் புள்ளிவிபர நுணுக்கங்களை புறக்கணிக்காதீர்கள்.
- தரவைப் பொதுமைப்படுத்தும் போதும் விளக்கும் போதும் பின்பற்றப்படும் முறையான நுணுக்கங்களை புறக்கணிக்காதீர்கள்.
- அனுபவ சான்றுகளால் துணை நிற்காத முடியாத பொதுமைப்படுத்தல்களை செய்ய வேண்டாம்.
- ஆய்வின் இலக்காகக் கருதப்படும் மக்கள் தொகைக்கு அப்பால் பொதுமைப்படுத்த வேண்டாம்.

## 9. அறிக்கையை எழுதுதல்

**a. செய்ய வேண்டியவை**

- ஆய்வின் பின்னணியையும் சூழலையும் பார்வையாளர்கள் புரிந்துகொள்வதற்காக ஏற்கனவே இருக்கும் எழுத்தாண்மைத் தொகுதியை முடிந்தவரை மதிப்பாய்வு செய்து வழங்கவும்.
- எழுதுவதற்கு முன் அறிக்கை கட்டமைப்பை கோடிட்டுக் காட்டுங்கள்.
- பகுப்பாய்வை மேற்கொள்ளும்போது செய்யப்பட்ட முக்கியமான அனுமானங்கள் மற்றும் கருதுகோள்களை தெளிவாகக் கூறுங்கள்.
- பெரிய அளவில் அடிக்கடி நிகழும் சூழல் காரணிகள் மற்றும் ஆய்வு முடிவுகளைப் பாதித்த சமீபத்திய சம்பவங்களை விளக்குங்கள்.
- ஆய்வின் வரம்புகளை விளக்குங்கள்.
- முடிந்தவரை ஆய்வில் இருந்து பொருத்தமான உதாரணங்களை பயன்படுத்தவும்.

**b. தவிர்க்க வேண்டியவை**

- கட்டமைப்பு இல்லாமல் எதேச்சையாக எழுத வேண்டாம்.
- சுருக்கங்கள் மற்றும் சுருக்கெழுத்துக்கள் என்ன என்பதை விளக்காமல் பயன்படுத்த வேண்டாம்.
- சிக்கலான மொழியைப் பயன்படுத்த வேண்டாம்.
- கண்டறிவுகளை விளக்குவதற்கு புள்ளிவிவர எண்களைப் பயன்படுத்த வேண்டாம், விபரிப்புகளில் புள்ளிவிவர எண்களை ஆதாரமாகப் பயன்படுத்தவும்.
- பரிந்துரைகளை வழங்க வேண்டாம்.
- அனுபவ ஆதாரங்களால் துணை நிற்கமுடியாத அபிப்பிராயங்களை வழங்க வேண்டாம்.
- ஒரு பந்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரந்த தலைப்புக்களை சேர்க்க வேண்டாம்.

# கருத்துக் கணிப்புப் படிவம்

ஜகருத்துக் கணிப்பை ஆரம்பிக்க முன்னர், கருத்துக் கணிப்பை மேற்கொள்பவர் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட வீட்டைப் பற்றிய பின்வரும் தகவல்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்ஸ

V1. மாகாணத்தின் பெயர்: ......................................................................................

V2. மாவட்டத்தின் பெயர்: ......................................................................................

V3. பிரதேச செயலகத்தின் பெயர் (DS): ................................................................

V4. கிராம சேவகரின் பெயர் (புே;புளு): ................................................................

V5. நேர்காணல் மேற்கொள்பவரின் குறியீடு: ___|___|___|___|___|___

V6. பதிலளிப்பவரின் குறியீடு: ___|___|___|___|___|___

கருத்துக் கணிப்பை மேற்கொள்பவருக்கான அறிவுறுத்தல்கள் தடித்த எழுத்துக்களில் சதுர அடைப்புக்குறிகளுக்குள் [] கொடுக்கப்பட்டுள்ளன. இவ் அறிவுறுத்தல்கள் கருத்துக் கணிப்பை மேற்கொள்பவருக்கானவை என்பதால், அவை பங்கேற்பாளருக்கு கேட்கும் விதமாக வாசிக்கப்படக்கூடாது..

## அறிமுகம் மற்றும் இணக்கம்

**கருத்துக் கணிப்பு 01:** வணக்கம். எனது பெயர் [**பங்கேற்பாளரிடம் உங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயரைச் சொல்லுங்கள்**]. நான் [**பங்கேற்பாளரிடம் உங்கள் நிறுவனத்தைப் பற்றிச் சொல்லுங்கள்**] மற்றும் ஆசிய மன்றத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்பை நடத்த நான் இங்கு வந்துள்ளேன். மேலும், இந்த கருத்துக் கணிப்பில் பங்கேற்க உங்கள் குடும்பத்தினர் எழுமாற்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நான் அரசாங்கத்தையோ அல்லது வேறு எந்த அரசியல் கட்சியையோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. உங்கள் சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார உறவுகளைப் புரிந்துகொள்ள இந்த ஆய்வு நடத்தப்படுகிறது. இந்த கருத்துக் கணிப்பை நடத்தி முடிக்க சுமார் 30 முதல் 45 நிமிடங்கள் வரை ஆகும். இதற்காக உங்கள் குடும்பத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து ஒரு வயது வந்த ஆண் / பெண்ணுடன் பேச விரும்புகிறேன். [**ஒரு வயது வந்த ஆணுடன் உங்கள் முந்தைய நேர்காணலை வெற்றிகரமாக முடித்திருந்தால், இந்த வீட்டிலிருந்து ஒரு வயது வந்த பெண்ணைத் தேர்வு செய்ய வேண்டும். அல்லது, ஒரு வயது வந்த பெண்ணுடன் உங்கள் முந்தைய நேர்காணலை வெற்றிகரமாக முடித்திருந்தால், இந்த வீட்டிலிருந்து ஒரு வயது வந்த ஆணைத் தேர்வு செய்ய வேண்டும்**].

[**ஆரம்பத்தில் பதிலளிப்பவர் தேர்வுக்கான நிபந்தனைகளை அடைந்தாராயின், கருத்துக் கணிப்பு** 02 **க்கு செல்லவும். ஆரம்பத்தில் பதிலளிப்பவர் தேர்வுக்கான நிபந்தனைகளை அடையவில்லையாயின், அங்கு அந்நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வேறொரு நபர் இருந்தால் கருத்துக் கணிப்பு** 02 **க்கு செல்லவும்.**]

**கருத்துக் கணிப்பு** 02: இப்போது இந்த கருத்துக் கணிப்பில் பங்கேற்க நீங்கள் தயாரா?

| | |
|---|---|
| ஆம், நான் பங்கேற்க தயாராக இருக்கிறேன் [**கருத்துக் கணிப்பு** 03 **ற்கு செல்லவும்**] | 1 |
| ஆம், ஆனால் என்னால் இப்போது பங்கேற்க முடியாது [**பின்தொடர்வதற்கு ஒரு நேரத்தை அமைத்து வெளியேறவும்**] | 2 |
| இல்லை, நான் வேறொருவரை பரிந்துரைக்கிறேன் [**புதிய பங்கேற்பாளரை தொடர்பு கொண்டு கருத்துக் கணிப்பு** 01 **மற்றும்** 02 **ஐ மீள நடத்தவும்**] | 3 |
| இல்லை, நான் பங்கேற்க விரும்பவில்லை [**பங்கேற்பாளரிடம் நன்றி தெரிவித்து விட்டு வெளியேறவும்**] | 4 |

**கருத்துக் கணிப்பு** 03: எங்கள் கருத்துக் கணிப்பில் பங்கேற்பது முற்றிலும் தன்னார்வமானது மற்றும் சேகரிக்கப்பட்ட எல்லா தரவும் ரகசியமாகவும் முற்றிலும் அநாமதேயமாகவும் காணப்படும் . பங்கேற்பாளரின் பெயர் இந்த கணக்கெடுப்பில் பதிவுசெய்யப்பட்ட பதில்களுடன் இணைக்கப்படாது அல்லது ஆய்வாளர்களால் அல்லது வேறு எவராலும் உங்கள் அடையாளத்தை அல்லது முகவரியை பதில்களுடன் இணைக்க முடியாது. கருத்துக் கணிப்பைத் தொடர எனக்கு உங்கள் ஒப்புதலைப் பெற முடியுமா?

| | |
|---|---|
| ஆம் [01 க்கு நகரவும்] | 1 |
| இல்லை [நன்றி தெரிவித்து விட்டு வீட்டிலிருந்து வெளியேறவும்] | 2 |

## மக்கள்தொகை மற்றும் வாடிக்கையாளர் ஆய்வு

1. **பங்கேற்பாளரின் பாலினம் [கவனித்து அறிக்கையிடவும், பங்கேற்பாளரிடம் கேட்க வேண்டாம்ஸ**

| | |
|---|---|
| ஆண் | 1 |
| பெண் | 2 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |

2. **உங்கள் வயது என்ன?**

| | |
|---|---|
| வயது | __ __ |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |

3. **நீங்கள் அடிக்கடி வீட்டில் பேசும் மொழி(கள்) பின்வருவனவற்றில் எது/எவை?**

| | |
|---|---|
| சிங்களம் | 1 |
| தமிழ் | 2 |
| ஆங்கிலம் | 3 |
| ஏனையவை [வாசிக்க வேண்டாம்] | 66 |

4. **பின்வரும் இனக்குழுக்களில் நீங்கள் எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர் என்று கருதுகிறீர்கள்?**

| | |
|---|---|
| சிங்களவர் | 1 |
| இலங்கை தமிழர் | 2 |
| இலங்கை முஸ்லிம் | 3 |
| இந்திய / மலை நாட்டுத் தமிழர் | 4 |
| பறங்கியர் | 5 |
| மலாய் | 6 |
| ஏனையவை **[வாசிக்க வேண்டாம்]** | 66 |
| இலங்கையர் மட்டும் அல்லது மேற்குறிப்பிட்ட சொற்களில் என்னைப் பற்றி நினைக்கவில்லை **[வாசிக்க வேண்டாம்]** | 77 |
| பதிலளிக்க மறுக்கவும் **[வாசிக்க வேண்டாம்]** | 88 |
| தெரியாது **[வாசிக்க வேண்டாம்]** | 99 |

5. **பின்வருவனவற்றில் நீங்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்?**

| | |
|---|---|
| இந்து மதம் | 1 |
| பௌத்தம் | 2 |
| இஸ்லாம் | 3 |
| கிறிஸ்தவம் - ரோமன் கத்தோலிக்கம் | 4 |
| கிறிஸ்தவம் - ரோமன் கத்தோலிக்கம் அல்லாதது | 5 |
| எதுவுமில்லை | 6 |
| ஏனையவை [வாசிக்க வேண்டாம்] | 77 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |

6. **உங்களைப் பற்றி நீங்கள் நினைப்பதை பின்வரும் தெரிவுகளில் எது சிறப்பாக விபரிக்கிறது?**

| | |
|---|---|
39. **போருக்குப் பின்னரான காலத்தையும் (2009 க்குப் பின்) அதற்கு முந்தைய காலத்தையும் கவனியுங்கள். போருக்கு முந்தைய காலத்தை விட அதற்குப் பின்னரான காலத்தில் உங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள் சமூக ரீதியாக இணைக்கப்பட்டுள்ளார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை | 2 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

40. **போருக்குப் பின்னரான காலத்தையும் (2009 க்குப் பின்) அதற்கு முந்தைய காலத்தையும் கவனியுங்கள். போருக்கு முந்தைய காலத்தை விட அதற்குப் பின்னரான காலத்தில் உங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள் பொருளாதார ரீதியாக இணைக்கப்பட்டுள்ளார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை | 2 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

41. **போருக்குப் பின்னரான காலத்தையும் (2009 க்குப் பின்) இன்றைய காலகட்டத்தைக் கவனியுங்கள். உங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்களுக்கு இடையிலான சமூக உறவுகள் அதிகரித்துள்ளன அல்லது குறைந்துவிட்டன என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| அதிகரித்தது | 1 |
| குறைந்தது | 2 |
| மாறவில்லை | 3 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

**42. யுத்தம் முடிவடைந்த (2009 க்குப் பிந்தைய) மற்றும் இன்றைய காலகட்டத்தைக் கவனியுங்கள். உங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்களுக்கு இடையிலான பொருளாதார இணைப்புகள் அதிகரித்துள்ளன அல்லது குறைந்துவிட்டன என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| அதிகரித்தது | 1 |
| குறைந்தது | 2 |
| மாறவில்லை | 3 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

**43. அடுத்த ஐந்து ஆண்டுகளைக் கவனியுங்கள். உங்கள் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்கள் சமூக ரீதியாக நெருக்கமாகி விடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை -இது அப்படியே இருக்கும் | 2 |
| இல்லை -இது மோசமடையும் | |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

**44. அடுத்த ஐந்து ஆண்டுகளைக் கவனியுங்கள். உங்கள் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்கள் பொருளாதார ரீதியாக மேம்படுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை -இது அப்படியே இருக்கும் | 2 |
| இல்லை -இது மோசமடையும் | |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

**45. உங்கள் கருத்துப்படி, உள்ளூர் மக்களை சமூக ரீதியாக நெருக்கமாகக் கொண்டு வருவதற்கென உங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரசாங்க திட்டங்கள் வெற்றியடைந்துள்ளனவா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை -அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை | 2 |
| இல்லை | |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

**46. உங்கள் கருத்துப்படி, உள்ளூர் மக்களை சமூக ரீதியாக நெருக்கமாகக் கொண்டு வருவதற்கென உங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரசு சாரா திட்டங்கள் வெற்றியடைந்துள்ளனவா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை | 2 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

47. **உங்கள் கருத்துப்படி, உள்ளூர் மக்களை பொருளாதார ரீதியாக நெருக்கமாகக் கொண்டு வருவதற்கென உங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரசாங்க திட்டங்கள் வெற்றியடைந்துள்ளனவா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை | 2 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

48. **உங்கள் கருத்துப்படி, உள்ளூர் மக்களை பொருளாதார ரீதியாக நெருக்கமாகக் கொண்டு வருவதற்கென உங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரசுச் சாரா திட்டங்கள் வெற்றியடைந்துள்ளனவா?**

| | |
|---|---|
| ஆம் | 1 |
| இல்லை | 2 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

49. **உங்கள் கருத்தின் படி, மோதலைத் தடுப்பதிலும், உங்கள் அக்கம் பக்கத்தில் அமைதியை வளர்ப்பதிலும் பின்வருவனவற்றில் எதுமிகவும் பயனுள்ளதாக இருக்கும்?**

| | |
|---|---|
| அப்பகுதி மக்களிடையே சமூக உறவுகளில் அதிகரிப்பு | 1 |
| அப்பகுதி மக்களிடையே பொருளாதார உறவுகளில் அதிகரிப்பு | 2 |
| இப்பகுதி மக்களிடையே அரசியல் உறவுகளில் அதிகரிப்பு | 3 |
| பதிலளிக்க மறுக்கவும் [வாசிக்க வேண்டாம்] | 88 |
| தெரியாது [வாசிக்க வேண்டாம்] | 99 |

50. **உங்கள் பகுதியில் சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதோடு மோதலைத் தணிக்கும் என்று நீங்கள் நம்பும் ஏதேனும் யோசனைகள் அல்லது தனிப்பட்ட கருத்துக்கள் இருந்தால், தயவுசெய்து அவற்றை கீழே குறிப்பிடவும்.**

▪


# SCA க்கு பரிந்துரைக்கப்பட்ட பகுப்பாய்வுக் கட்டமைப்பு

## SCA பகுப்பாய்வுக்கான பகுப்பாய்வுக் கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்

பகுப்பாய்வை முன்னிலைப்படுத்துவதென்பது சமூக மூலதன மதிப்பீடு போன்று ஒரு சமூக ஆய்வை நடத்துவதில் உள்ள மிகவும் சவாலான பகுதியாகும். தேவைப்படும் அனுபவ ஆதாரங்களுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்துவதற்கும், தரவை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வழங்குவதற்கும் திறமை மற்றும் நடைமுறை ஆகிய இரண்டுமே தேவை. SCA இன் பூர்வாங்க பகுப்பாய்வு மற்றும் தரவைக் காட்சிப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதில் பின்வரும் பகுப்பாய்வுக் கட்டமைப்பை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

**கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

- மூன்று பகுப்பாய்வு முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன்
    - விளக்கமான புள்ளிவிபரங்கள்.
    - ஒரு கருத்துக் கணிப்பில் அதன் தரவின் சுருக்கத்தை விபரிக்க விளக்கமான புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது பெரிய அளவிலான தரவை எளிமைப்படுத்த உதவுகிறது மற்றும் எளிய வரைபடப் பகுப்பாய்வோடு தரவின் ஒவ்வொரு அளவுடைய பகுப்பாய்விற்கும் அடிப்படையை வழங்குகிறது.
    - குறுக்கு அட்டவணைகள் அல்லது குறுக்கு தாவல்கள் ஆகிய இரண்டும் பகுப்பாய்வு முறைகளும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் இடையே நேரடியாகத் தெரியாத உறவை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்ற ஆராய்ச்சி முறைகளாகும். தொடர்புகளின் துணைக்காரணம் மற்றும் முக்கியத்துவம் (ஐஏ மற்றும் னுஏ தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதற்கு).
    - சி-சதுரம் (Chi-square) (வகைப்படுத்தப்பட்ட மாறிகளைப் பகுப்பாய்வு செய்ய).
- குறுக்கு அட்டவணைகளை பயன்படுத்தும் போது, பரிந்துரைக்கப்பட்ட பகுப்பாய்வு இவ்வாறு கட்டமைக்கப்படுகிறது்





கேள்வி 10 க்கான பதில், கூற்று 1

இந்த பகுதி இனரீதியாக வேறுபட்டது (ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்கின்றனர்)

கேள்வி 3 க்கான பதில் **(பிரதேச செயலகத்தின் பெயர்)**

கேள்வி 4 க்கான பதில்கள் **(நீங்கள் பின்வரும் எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர் என்று கருதுகிறீர்கள்?)**

- மூன்று வழிக் குறுக்கு அட்டவணைகள் ஒரு முடிவு மரத்தின் வடிவத்தை எடுக்கும், மேலும் அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப விளக்கப்பட வேண்டும்




**மக்கள்தொகை மற்றும் மாதிரியின் விளக்கம்**

V3 x 1 x 2

1 x 2 x 3

1 x 2 x 4

1 x 2 x 5

1 x 2 x 7

1 x 2 x 8

1 x 9

**பகுப்பாய்வுக் கட்டமைப்புகள்**

- தனிப்பட்ட பார்வைகளில் இருப்பிடம் மற்றும் புள்ளிவிவரங்களின் விளைவு

  V3 x 6

  V3 x 4 x 6

  V3 x 5 x 6

  V3 x 7 x 6

  V3 x 8 x 6

- பன்முகத்தன்மை குறித்த விழிப்புணர்வு

  V3 x 1 x 10.1
  V3 x 1 x 10.2
  V3 x 1 x 10.3

V3 x 1 x 10.4
V3 x 1 x 10.5
V3 x 1 x 10.6

V3 x 4 x 10.1
V3 x 4 x 10.2
V3 x 4 x 10.3
V3 x 4 x 10.4
V3 x 4 x 10.5
V3 x 4 x 10.6

V3 x 5 x 10.1
V3 x 5 x 10.2
V3 x 5 x 10.3
V3 x 5 x 10.4
V3 x 5 x 10.5
V3 x 5 x 10.6

V3 x 1 x 10.1
V3 x 1 x 10.2
V3 x 1 x 10.3
V3 x 1 x 10.4
V3 x 1 x 10.5
V3 x 1 x 10.6

V3 x 7 x 10.1
V3 x 7 x 10.2
V3 x 7 x 10.3
V3 x 7 x 10.4
V3 x 7 x 10.5
V3 x 7 x 10.6

V3 x 8 x 10.1
V3 x 8 x 10.2
V3 x 8 x 10.3
V3 x 8 x 10.4
V3 x 8 x 10.5
V3 x 8 x 10.6

- வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோருக்கு சம வாய்ப்பு

V3 x 4 x 11.1
V3 x 4 x 11.2
V3 x 4 x 11.3

V3 x 4 x 11.4
V3 x 4 x 11.5
V3 x 4 x 11.6
V3 x 4 x 11.7
V3 x 4 x 11.8
V3 x 4 x 11.9
V3 x 4 x 11.10
V3 x 4 x 11.11
V3 x 4 x 11.12

V3 x 5 x 11.1
V3 x 5 x 11.2
V3 x 5 x 11.3
V3 x 5 x 11.4
V3 x 5 x 11.5
V3 x 5 x 11.6
V3 x 5 x 11.7
V3 x 5 x 11.8
V3 x 5 x 11.9
V3 x 5 x 11.10
V3 x 5 x 11.11
V3 x 5 x 11.12

V3 x 7 x 11.1
V3 x 7 x 11.2
V3 x 7 x 11.3
V3 x 7 x 11.4
V3 x 7 x 11.5
V3 x 7 x 11.6
V3 x 7 x 11.7
V3 x 7 x 11.8
V3 x 7 x 11.9
V3 x 7 x 11.10
V3 x 7 x 11.11
V3 x 7 x 11.12

V3 x 8 x 11.1
V3 x 8 x 11.2
V3 x 8 x 11.3
V3 x 8 x 11.4
V3 x 8 x 11.5
V3 x 8 x 11.6
V3 x 8 x 11.7
V3 x 8 x 11.8

V3 x 8 x 11.9
V3 x 8 x 11.10
V3 x 8 x 11.11
V3 x 8 x 11.12

- இனவாதம் பற்றிய உணர்வுகள்

V3 x 4 x 12.1
V3 x 4 x 12.2
V3 x 4 x 12.3
V3 x 4 x 12.4
V3 x 4 x 12.5
V3 x 4 x 12.6

V3 x 5 x 12.1
V3 x 5 x 12.2
V3 x 5 x 12.3
V3 x 5 x 12.4
V3 x 5 x 12.5
V3 x 5 x 12.6

V3 x 4 x 17.1
V3 x 4 x 17.2
V3 x 4 x 17.3
V3 x 4 x 17.4
V3 x 4 x 17.5
V3 x 4 x 17.6
V3 x 4 x 17.7
V3 x 4 x 17.8
V3 x 4 x 17.9
V3 x 4 x 17.10

V3 x 5 x 17.1
V3 x 5 x 17.2
V3 x 5 x 17.3
V3 x 5 x 17.4
V3 x 5 x 17.5
V3 x 5 x 17.6
V3 x 5 x 17.7
V3 x 5 x 17.8
V3 x 5 x 17.9
V3 x 5 x 17.10

- இன-மதம் தொடர்பாக சுற்றத்தாருடனான சகிப்புத்தன்மை மீது வெளிப்படுத்தப்பட்ட விருப்பம்

    V3 x 5 x 13

    V3 x 4 x 14

- வெளிப்படுத்தப்பட்ட விருப்பம் சமூக மூலதனம் - சுற்றத்திலுள்ளவர்களுடனான பரஸ்பர உறவு

    V3 x 5 x 15

    V3 x 4 x 15

- சமூக மூலதனம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விருப்பம் - சுற்றத்திலுள்ளவர்கள் மீதான நம்பிக்கையின் நிலை

    V3 x 5 x 16.I

    V3 x 5 x 16.II

    V3 x 4 x 16.I

    V3 x 4 x 16.II

- தனிநபர் / நிறுவன நம்பிக்கை பற்றிய உணர்வுகள்

    V3 x 5 x 18.1

    V3 x 5 x 18.2

    V3 x 5 x 18.3

    V3 x 5 x 18.4

    V3 x 5 x 18.5

    V3 x 5 x 18.6

    V3 x 5 x 18.7

    V3 x 5 x 18.8

    V3 x 4 x 18.1

    V3 x 4 x 18.2

    V3 x 4 x 18.3

    V3 x 4 x 18.4

    V3 x 4 x 18.5

    V3 x 4 x 18.6

    V3 x 4 x 18.7

    V3 x 4 x 18.8

- சமூக மூலதனம் - நம்பிக்கை - பாதுகாப்பு

V3 x 4 x 19
V3 x 5 x 19

V3 x 4 x 37
V3 x 5 x 37

V3 x 4 x 37 x 38
V3 x 5 x 37 x 38

- சமூக மூலதனம் - நம்பிக்கை - வணிகச் சூழல்

வாங்குபவர்

V3 x 4 x 20
V3 x 5 x 20

வழங்குநர்

V3 x 4 x 21
V3 x 5 x 21

விநியோகஸ்தர்

V3 x 4 x 22
V3 x 5 x 22

முதலீட்டாளர்

V3 x 4 x 24
V3 x 5 x 24

- சமூக மூலதனம் - வலையமைப்பு - நன்மைகள்

சுற்றத்தார்

V3 x 4 x 23
V3 x 5 x 23

V3 x 4 x 28
V3 x 5 x 28
V3 x 4 x 26
V3 x 5 x 26

றுழசமிடயஉ_ந

V3 x 4 x 25

V3 x 5 x 25

- சமூக மூலதனம் - வலையமைப்பு - தொண்டு

நிதி அல்லாதது

V3 x 4 x 27

V3 x 5 x 27

நிதி

V3 x 4 x 31

V3 x 5 x 32

- சமூக மூலதனம் - வலையமைப்பு - பங்கேற்பு

தனிப்பட்ட

V3 x 4 x 29
V3 x 5 x 30

நிறுவன

V3 x 4 x 33
V3 x 5 x 33

V3 x 4 x 34
V3 x 5 x 34

- சமூக மூலதனம் - வலையமைப்பு - நன்மைகள்

V3 x 4 x 35.1
V3 x 4 x 35.2
V3 x 4 x 35.3
V3 x 4 x 35.4
V3 x 4 x 35.5
V3 x 4 x 35.6
V3 x 4 x 35.7
V3 x 4 x 35.8
V3 x 4 x 35.9
V3 x 4 x 35.10

V3 x 5 x 35.1
V3 x 5 x 35.2
V3 x 5 x 35.3
V3 x 5 x 35.4
V3 x 5 x 35.5
V3 x 5 x 35.6
V3 x 5 x 35.7
V3 x 5 x 35.8
V3 x 5 x 35.9
V3 x 5 x 35.10

- சமூக மூலதனம் - வலையமைப்பு - செயற்றிறன்

V3 x 4 x 36.1
V3 x 4 x 36.2
V3 x 4 x 36.3
V3 x 4 x 36.4
V3 x 4 x 36.5
V3 x 4 x 36.6
V3 x 4 x 36.7
V3 x 4 x 36.8
V3 x 4 x 36.9

V3 x 5 x 36.1
V3 x 5 x 36.2
V3 x 5 x 36.3
V3 x 5 x 36.4
V3 x 5 x 36.5
V3 x 5 x 36.6
V3 x 5 x 36.7
V3 x 5 x 36.8
V3 x 5 x 36.9

- கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் - அடிமட்ட

வரலாற்று சார்பு பகுப்பாய்வு - யுத்தத்துக்கு முன்

V3 x 4 x 39
V3 x 5 x 39

V3 x 4 x 40
V3 x 4 x 40

வரலாற்று சார்பு பகுப்பாய்வு - யுத்தத்துக்கு பின்

V3 x 4 x 41
V3 x 5 x 41

V3 x 4 x 42
V3 x 4 x 42

எதிர்கால எதிர்பார்ப்பு பகுப்பாய்வு

V3 x 4 x 43
V3 x 5 x 43

V3 x 4 x 44
V3 x 5 x 44

அரசு எதிர் அரசு-சாரா சார்பு பகுப்பாய்வு

V3 x 4 x 45
V3 x 5 x 45

V3 x 4 x 46
V3 x 5 x 46

V3 x 4 x 47
V3 x 5 x 47

V3 x 4 x 48
V3 x 5 x 48

முறை சார்பு பகுப்பாய்வு

V3 x 4 x 49
V3 x 5 x 49

- பங்கேற்பாளரின் பரிந்துரை மீதான பகுப்பாய்வு

பொதுவான வகைகளாக தனித்துவமான அடையாளங்காட்டிகளைப் பயன்படுத்தி பங்கேற்பாளர்களால் வழங்கப்பட்ட குறியீட்டுப் பதில்கள் மற்றும் வகைகளின் நிகழும் நிலை மற்றும் அறிக்கையை எண்ணுங்கள்.

குறிப்பு: n என்பது மாதிரி அளவு என்பதை நினைவில் கொள்க

| 50 வது கேள்விக்கு பங்கேற்பாளரின் பதில் | கருப்பொருள் வகை | தனித்துவமான குறியீடு | நிகழ்வின் நிகழ்மை |
|---|---|---|---|
| குறைந்தபட்சம் அடிப்படைத் தேவைகளை அணுகும் அனைவராலும் மோதலைத் தடுக்கலாம் என்று நான் நம்புகிறேன் | அடிப்படைத் தேவைகள் (Basic Needs) | BN | 67/n |
| மோதலுக்கான விலையை மக்கள் புரிந்து கொள்ளும் பட்சத்தில் அமைதி இருக்கும் என்று நான் நம்புகிறேன் | மோதலுக்கான விலை (Cost of Conflict) | COC | 356/n |

# விடய ஆய்வுகள்

**விடயம் 1: பங்கேற்பாளரைத் தடுத்தல் மற்றும் பங்கேற்பதை எதிர்த்தல்.**

அன்னா (கற்பனையான பெயர்) வாரத்தில் ஒரு நாளில் காலை 9.30 மணியளவில் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ள கிராமத்திற்குள் நுழைகிறார். அவர் கிராமத்தில் ஒரு சிறிய கோவிலை ஒரு அடையாளமாகத் (landmark) தேர்ந்தெடுத்து, வலது கை விதியின் அடிப்படையில் தனது வலதுபுறம் செல்லும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து, கணக்கெடுப்பை நிர்வகிப்பதற்காக தனது வலது புறத்தில் உள்ள முதல் வீட்டைத் தெரிவு செய்கிறார். பின்னர், அவர் அவ்வீட்டின் அருகில் நின்று அங்கிருந்து வீட்டின் குடியிருப்பாளர்களை அழைக்கிறார். அன்னாவால் வீட்டிற்குள் நபர்களின் நடமாட்டத்தைக் அவதானிக்க முடிந்தும் கூட வீட்டிலிருந்து வந்து யாரும் அவளை வரவேற்கவுமில்லை அவளுடைய அழைப்புக்கு ஒரு பதிலும் கிடைக்கவுமில்லை. அன்னா தயக்கத்துடன் குடியிருப்பாளர்களை நோக்கி இன்னும் சில முறை அழைக்கவும் இறுதியில் ஒரு மனிதன் வீட்டினுள் இருந்து வெளியே வந்து அன்னாவை நோக்கி என்ன வேண்டும் என மிகவும் முரட்டுத்தனமாக விசாரிக்கிறான்.

அவர் அப்பகுதியில் உள்ள “கோடக் லோகு” பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவி என்றும், சமூகத்திற்குள் சமூக மூலதனம் குறித்த ஒரு கருத்துக் கணிப்பை நடத்தி வருவதாகவும் அன்னா பணிவுடன் விளக்குகிறார். இந்த ஆய்வுக்காக அன்னா சர்வதேச தீவிரவாத குழுக்களிடமிருந்து நிதியைப் பெறுகிறாரா என்று அந்நபர் மிகவும் முரட்டுத்தனமாக வினவுவதுடன், அவரது கேள்விகளுக்கு பதிலளிப்பதில் தனது மதிப்புமிக்க நேரத்தை ஏன் வீணாக்க வேண்டும் என்றும் கேட்கிறார். “கோடக் லோகு” பல்கலைக்கழகத்துடன் இணைந்து இப்பகுதியின் உள்ளூர் அரசாங்கத்தின் அனுமதியுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்று அன்னா விளக்குகிறார். மேலும், அன்னா அதற்குச் சான்றுகளாக தம்மிடமுள்ள உள்ளூர் அதிகார சபையின் அனுமதி பெற்றமைக்கான கடிதத்தையும் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தையும் அந்நபருக்கு காண்பிக்க முன்வருகிறார். தான் அரசாங்கத்தையோ அல்லது அதன் கடிதங்களையோ கவனிப்பதில்லை எனக் கூறி கடிதங்களைப் பார்வையிட மறுத்து, பின்னர் தான் கருத்துக் கணிப்பில் பங்கேற்க முடிவு செய்தால் எவ்வகையிலாவது தனக்கு ஊதியம் வழங்கப்படுமா என்று கேட்கிறார்.

அவருக்கு ஊதியம் எதனையும் வழங்க முடியாது என அன்னா விளக்குகிறார். அந்நபரை இது மேலும் எரிச்சலூட்டுகிறது. இந்நபர் வன்முறையாளராக மாறக்கூடும் என்று அன்னா கவலைப்படுகிறார். ஆனால் அவரது சகாக்கள் மற்றும் மேற்பார்வையாளர்களால் இது தோல்வியின் அறிகுறியாக கருதப்படலாம் என்று அவர் நினைப்பதால் அந்நபரைபதிலளிக்க வைக்க முயற்சிக்காமல் வெளியேற விரும்பவில்லை. ஆய்வைப் பற்றி மேலும் விளக்கமாகக் கூறினால் அந்நபர் கருத்துக் கணிப்பில் பங்கேற்க முடியுமா என்று அன்னா தயக்கத்துடன் கேட்கிறார். அந்த மனிதன் மேலும் எரிச்சலடைந்து, அன்னாவிடம் தனது மதிப்புமிக்க நேரத்தை வீணடித்ததற்காக சத்தம் போட்டு விட்டு அவளை வெளியேறச் சொல்கிறான்.



**முக்கிய குறிப்புகள்:**

- கருத்துக் கணிப்பு நிர்வாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வீடுகளின் குடியிருப்பாளர்கள் எப்போதும் கருத்துக்கணிப்பாளர்களுக்கு சாதகமான பதிலை வெளிப்படுத்த மாட்டார்கள். இதற்குப் பின்வருவன காரணங்களாக இருக்கலாம்
    - பதிலளிப்பவரின் மனநிலை
    - பதிலளிப்பவரின் அணுகுமுறை
    - பதிலளிப்பவரின் கடந்தகால அனுபவங்கள்
    - சுற்றுச் சூழல் காரணிகள்
    - கருத்துக்கணிப்பாளரின் வெளித் தோற்றம்
    - சமூக மாறா நிலை
    - கலாச்சார மற்றும் சமூக நடைமுறைகள்
- கருத்துக் கணிப்பில் பங்கேற்பது முற்றிலுமாக ஒரு தன்னார்வ பயிற்சியாகும். மேலும், வீட்டில் வசிப்பவர்களை பங்கேற்கச் செய்வதற்கு கருத்துக்கணிப்பாளரால் நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், ஒரு வீட்டில் வசிப்பவர்கள் கணக்கெடுப்பில் பங்கேற்க மறுப்பதானது கருத்துக்கணிப்பாளரின் தோல்வி அல்ல.
- பெரும்பாலான குடியிருப்பாளர்கள் கருத்துக்கணிப்பாளர்கள்ளை அவர்களின் வருகையின் நோக்கத்தை விளக்குவதற்கு அனுமதிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும் கணக்கெடுப்பை முடிக்க முடியாவிட்டால் அல்லது விரும்பவில்லை என்றால் பங்கேற்பதை பெரும்பாலும் பணிவுடன் மறுக்கிறார்கள். இருப்பினும், சில நபர்களை அணுகும்போது ஆக்ரோஷமாக பதிலளிக்கலாம் மற்றும் இந்த நபர்களை கணக்கெடுப்பில் பங்கேற்கச் செய்ய முயற்சிப்பதைத் தவிர்ப்பது மிகவும் சிறந்தது.
- சில நபர்கள் கருத்துக் கணிப்புகளில் பங்கேற்பதற்கு ஈடாக தங்கள் நேரத்திற்கு இழப்பீட்டை; ஊதியத்தை எதிர்பார்க்கிறார்கள். இந்த விடயத்தில் பதிலளிப்பவரை கருத்துக்கணிப்பாளரினால் சமாதானப்படுத்த முடியாத பட்சத்தில் இந்த வீடுகளைத் தவிர்ப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது.
- வீடுகளில் கருத்துக் கணிப்பை நிர்வகிப்பதில் கருத்துக்கணிப்பாளர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது மற்றும் கருத்துக் கணிப்புகளில் பங்கேற்க தனிநபர்களைத் தேர்ந்தெடுப்பதில் கருத்துக்கணிப்பாளர்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செயலாற்ற வேண்டியதுடன், பாதுகாப்பற்ற நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.

**விடயம் 2: மத வேறுபாடுகள்.**

அன்டன் (கற்பனையான பெயர்) ஒரு வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ள கிராமத்திற்குள் நுழைகிறார். அவர் நிலையான நெறிமுறையைப் பின்பற்றி கிராமத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய மசூதியை ஒரு அடையாளமாகத் (landmark) தேர்ந்தெடுத்து, வலது கை விதியின் அடிப்படையில் தனது வலதுபுறம் செல்லும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து, கணக்கெடுப்பை நிர்வகிப்பதற்காக தனது வலது புறத்தில் உள்ள முதல் வீட்டைத் தெரிவு செய்கிறார். இந்த வீட்டில் மாதிரி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு தமிழ் நபரை சந்திப்பதால் அன்டன் தனது முதல் முயற்சியில் வெற்றி பெறுகிறார். தனது முதல் முயற்சியில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் அவர் தெருவில் மேலும் நகர்ந்து, மூன்று வீடுகளைத் தவிர்த்து, இடது புறத்தில் ஒரு வீட்டை இரண்டாவது கணக்கெடுப்பை நடத்த தெரிவு செய்கிறார். பின்னர், அவர் அவ்வீட்டின் அருகில் நின்று அங்கிருந்து வீட்டின் குடியிருப்பாளர்களை அழைக்கிறார். அதற்குப் பதிலளிக்கும் விதமாக, ஒரு பெண் முழுமையாக புர்கா உடையணிந்து வீட்டிலிருந்து வெளியே வந்து அன்டனை மரியாதையாக வரவேற்று, அவருக்கு என்ன வேண்டும் என வினவுகிறார்..

அவர் அப்பகுதியில் உள்ள "டிக்கக் பொடி" பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் என்றும், இந்த சமூகத்திற்குள் சமூக மூலதனம் குறித்து ஒரு கணக்கெடுப்பை நடத்தி வருவதாகவும் அன்டன் பணிவுடன் விளக்குகிறார். அந்த வீட்டில் உள்ள ஆண்கள் அனைவரும் பிரார்த்தனைக்காக சென்றுவிட்டதாகவும், தன்னைத் தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை என்றும் அந்தப் பெண் கூறுகிறார். தனது முதல் வெற்றியின் காரணமாக இன்னும் உற்சாகத்திலிருக்கும் அன்டன், தனக்கு முதல் பதிலளித்தவர் ஓர் ஆண் என்பதால் எப்படியாவது கருத்துக் கணிப்புக்கு ஒரு பெண் பதிலளிக்க வேண்டும் என்று அப்பெண்ணுக்கு விளக்குகிறார். மேலும் கருத்துக் கணிப்பில் அப்பெண் பங்கேற்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகிறார். அப்பெண் இப்போது சற்றே எரிச்சலடைந்து, அன்டனுக்கு தான் தனது கணவர் இல்லாமல் ஒரு ஆண் கருத்துக்கணிப்பாளருடன் கருத்துக் கணிப்பில் பங்கேற்க முடியாது என்றும் தொடர்ந்து வலியுறுத்துவது பொருத்தமற்றது எனவும் விளக்குகிறார். பெண்களின் பதில்களின் குறைவான விகிதங்கள் காரணமாக வேண்டுமென்றே பெண்களை மாதிரியாகக் கொள்ள வேண்டும் என கள விளக்கத்தின்போது தமக்கு கூறப்பட்டுள்ளதை நினைவில் கொண்டு, அப்பெண்ணை சமாதானப்படுத்துவதற்கான தனது இறுதி முயற்சியாகவும் கணவர் இல்லாதபோது அவரை வீட்டிற்குள் அழைப்பதைத் தவிர்ப்பதற்கும் தான் தெருவில் நிற்கும்போது கருத்துக் கணிப்பில் பங்கேற்கும்படி கேட்கிறார். அப்பெண் மறுத்து விட்டு கோபமாக வீட்டிற்குள் திரும்பிச் செல்கிறாள்.



**முக்கிய குறிப்புகள்:**

- இலக்காகக் கருதப்படும் மாதிரிகளுக்குள் காணப்படும் மத மற்றும் கலாச்சார நுணுக்கங்கள் எப்போதும் கருத்துக்கணிப்பாளர்களால் அடையாளம் காணப்பட்டு மதிக்கப்படல் வேண்டும்.
- ஆய்வுத் தேவைகள் மற்றும் ஆய்வின் பின்னணியை தெளிவாகவும் பணிவாகவும் விளக்கியும் கூட கூறப்பட்ட காரணத்தை பொருட்படுத்தாமல் ஒரு பங்கேற்பாளர் கருத்துக் கணிப்பில் பங்கேற்க மறுக்கும் பட்சத்தில்,

கருத்துக் கணிப்பில் பங்கேற்க வற்புறுத்துவதை கருத்துக்கணிப்பாளர் தவிர்க்க வேண்டும்.

- கருத்துக்கணிப்பாளர் வீட்டிற்கு வருகை தரும் நேரத்தில் பதிலளிப்பவரால் கருத்துக் கணிப்பில் பங்கேற்க முடியாவிட்டால், பதிலளிப்பவரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான ஒரு நேரத்தை குறிப்பிட்டும்படி தெரிவொன்றைக் கொடுக்க வேண்டும்.
- பதிலளிப்பவர்களின் கலாச்சார பின்னணியுடன் மிகவும் ஒத்துப்போகும் ஒரு சக ஊழியரைக் கொண்டிருப்பதற்கு கருத்துக்கணிப்பாளரால் முடியும். முடிந்தால் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வீட்டுக்குச் செல்லுங்கள்.
- பங்கேற்பாளர்களுக்கு அசௌகரியம் அல்லது மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை கருத்துக்கணிப்பாளர்கள் தவிர்க்க வேண்டும்.
- தங்கள் பின்னணியை விட வேறுபட்ட கலாச்சாரத்தைக் கொண்டுள்ள பகுதிகளில் கருத்துக் கணிப்புகளை நடத்தும்போது கருத்துக்கணிப்பாளர்கள் எச்சரிக்கையுடனும் நல்ல நுண்ணறிவாற்றலுடனும் இருக்க வேண்டும்.

**விடயம் 3: நிறுவனத் தலையீடுகள்.**

ரங்கிகா (கற்பனையான பெயர்) ஒரு திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ள கிராமத்திற்குள் நுழைகிறார். அவர் நிலையான நெறிமுறையைப் பின்பற்றி கிராமத்தில் அமைந்துள்ள காவல் நிலையத்தை ஒரு அடையாளமாகத் (landmark) தேர்ந்தெடுத்து, வலது கை விதியின் அடிப்படையில் தனது வலதுபுறம் செல்லும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து, கணக்கெடுப்பை நிர்வகிப்பதற்காக தனது வலது புறத்தில் உள்ள முதல் வீட்டைத் தெரிவு செய்கிறார். ரங்கிகா தான் முயற்சித்த முதல் சில வீடுகளில் ஒன்றிலேனும்  ஒரு கருத்துக் கணிப்பையேனும் வெற்றிகரமாக மேற்கொள்ளவில்லை. இதனால் சற்று மனம் வருந்தி தனது கள மேற்பார்வையாளரிடம் பேசுகிறாள். மேற்பார்வையாளரும் அவளைத் தொடர்ந்து முயற்சி செய்யுமாறு அறிவுறுத்துகிறார். ரங்கிகா மிகவும் பின் தங்கிய கிராமப்புறத்தில் உள்ள வீட்டைக் குறிவைக்க முடிவுசெய்து, மீண்டும் ஒரு வீட்டை முயற்சிக்கும் முன் கிராமத்திற்குள்ளே தூரத்திற்கு நகர்ந்து செல்கிறார். சந்தேகத்துக்கிடமான முறையில் ரங்கிகா வீடு வீடாகச் செல்வதையும், தொலைபேசியில் பேசுவதையும் கவனித்துக் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரர் ரங்கிகாவை விசாரிப்பதற்காக அவரை எதிர்கொள்கிறார்.

ரங்கிகா பணிவாக தான் “லொக்கு டவுன்” எனும் இடத்தில் உள்ள “டிக்கக் பொடி” பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒரு மாணவி என்றும், பல்கலைக்கழகத்தின் சார்பாக இந்த சமூகத்திற்குள் சமூக மூலதனம் குறித்த ஒரு கருத்துக் கணிப்பை மேற்கொண்டு வருவதாகவும் பணிவுடன் விளக்குகிறார். அப் போலீஸ்காரர் ரங்கிகாவிடம் அப்பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் நடந்ததாகவும், காவல்துறையும் சமூகமும் அந்நியர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கிறார்கள் என்றும், இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற்றுள்ளீர்களா என்று கேட்கிறார். அப்பகுதியின் உள்ளூராட்சி மன்றம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளதாக ரங்கிகா போலீஸ்காரருக்கு உறுதியளிக்கிறார். அதற்கு போலீஸ்காரர் ரங்கிகாவிடம் அவர் தெரிவித்ததை உறுதிப்படுத்தும் ஆதாரங்களைக் கேட்கிறார். ஆனால்,

துரதிர்ஷ்டவசமாக ரங்கிகா உள்ளூர் அதிகார சபை மற்றும் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரக் கடிதத்தை தனது ஹோட்டல் அறையில் விட்டுவிட்டார். இதனால், போலீஸ்காரர் மேலும் சந்தேகத்திற்கு உள்ளாகிறார். ரங்கிகா தனது கள மேற்பார்வையாளருக்கு தொலைபேசியில் அழைப்பை மேற்கொண்டு போலீஸ்காரரை பேசவும் கேட்டுக் கொள்கிறார். ஆனால், அவர் அவளை நம்பவில்லை என்றும், ரங்கிகா அழைக்கும் யாரையும் நம்பவில்லை என்றும், உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறி அங்கீகாரத்திற்கான ஆதாரங்களுடன் திரும்பி வரவும் ரங்கிகாவிடம் கூறுகிறார். ரங்கிகா அப்பகுதியை விட்டு வெளியேறுகிறார், ஆனால், யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத கருத்துக் கணிப்பு பயிற்சியில் தலையிட்டதற்காக காவல்துறை மீது மிகுந்த கோபத்தில் உள்ளார்.



**முக்கிய குறிப்புகள்:**

- காவல்துறையினருக்கும் பிற தொடர்புடைய அதிகாரிகளுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தும் ஒவ்வொரு நபரையும் கேள்வி கேட்கவும் தடுத்து வைக்கவும் உரிமை உண்டு.
- கருத்துக்கணிப்பாளர் களத்தில் இருக்கும்போது எப்போதும் பின்வரும் பொருட்களை தங்களுடன் வைத்திருக்க வேண்டும்
    - அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற அடையாள அட்டைகள்.
    - பல்கலைக்கழக அடையாள அட்டை.
    - பல்கலைக்கழக கடிதத் தலைப்பில் வரையப்பட்ட பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கடிதம்.
    - அங்கீகரிக்கப்பட்ட பிற ஆவணங்கள்.
- உங்களைத் தடுத்து வைத்திருக்கும் நபர் உங்களை நம்பவில்லை என்றால், நீங்கள் அழைக்கும் எவரையும் அவர்கள் நம்ப மாட்டார்கள் அத்துடன் உங்கள் மேற்பார்வையாளரை அழைக்க முன்வருவது உங்களின் அங்கீகாரத்திற்கான மாற்றாகக் கருதப்பட மாட்டாது.
- கள ஊழியர்களுடன் முரண்படக்கூடிய அதிகாரப்பு'ர்வ நபர்களுடன் முழுமையாக ஒத்துழைப்பதற்கு எப்போதும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் என்ன செய்யப்படுகிறது என்பதையும் ஆய்வின் நோக்கத்தையும் தெளிவாகவும் பணிவுடனும் விளக்கவும்.
- இலக்காகக் கருதப்படும் சமூகத்தில் நிறுவனத்தின் மீதான எதிர்ப்பு அதிகரித்தால், உத்தியோகபு'ர்வமான வழிகளின் மூலம் நிலைமை சுமுகமாகத் தீர்க்கப்படும் வரை கள நடவடிக்கைகளை தற்காலிகமாக ரத்து செய்வது குறித்து பரிசீலிப்பது பயனுள்ளதாகும்.
- எந்தவொரு காரணத்திற்காகவும் கருத்துக்கணிப்பாளரை சட்ட அமுலாக்க அதிகாரிகள் அல்லது இது போன்ற பிற அதிகாரப்பு'ர்வ நபர்கள் தடுத்து வைத்திருந்தால், அவர் சட்டத்தின் வரம்புகள் மற்றும் தனிநபர் உரிமைகளுக்கு முழுமையாக கட்டுப்பட்டு ஒத்துழைக்க வேண்டும்.

- கருத்துக்கணிப்பாளர் தடுத்து வைக்கப்பட்டால், அவர் உடனடியாக அவர்களின் கள மேற்பார்வையாளர் மற்றும் பிற தொடர்புடைய பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு அறிவித்து நிலைமை குறித்து தெளிவாக விளக்க வேண்டும்.
- தொழில்துறை அடர்த்தி மற்றும் இனக் கலப்பு போன்ற கூறுகளில் கோட்பாட்டு கட்டமைப்பின் காரணிகளைப் பயன்படுத்தி புவியியலானது தெரிவு செய்யப்படுவதால், சில நேரங்களில் கள நிலையைச் செயல்படுத்துவதில் சிரமத்திற்கு ஆளாகக்கூடும். கருத்துக்கணிப்பாளர்கள் மற்றும் கள மேற்பார்வையாளர்கள் வாடிக்கையாளர் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் இருவருடனும் கலந்துரையாடலாம். மேலும், ஆய்வின் பொதுமைப்படுத்துதல்களை பாதிக்காமல் இலக்காகக் கருதப்பட்டு செயல்படுத்தும் இடத்தை மாற்றுவதற்கான முயற்சியை எடுக்கலாம்.

**விடயம் 4: உள் சார்பு மற்றும் மாறா நிலை.**

விஜேராஜ் (கற்பனையான பெயர்) ஒரு புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ள கிராமத்திற்குள் நுழைகிறார். அவர் நிலையான நெறிமுறையைப் பின்பற்றி கிராமத்திலுள்ள நகர மண்டபத்தை ஒரு அடையாளமாகத் (landmark) தேர்ந்தெடுத்து, வலது கை விதியின் அடிப்படையில் தனது வலதுபுறம் செல்லும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து, கணக்கெடுப்பை நிர்வகிப்பதற்காக தனது வலது புறத்தில் உள்ள முதல் வீட்டைத் தெரிவு செய்கிறார். விஜே வீட்டிற்குள் நுழைந்தபோது ஒரு மிகக் குறைந்த சாதிபூ தமிழ் குடும்பம் அங்கு வசிக்கிறது எனக் கருதுகிறார். விஜே யாழ்ப்பாண தமிழ் உயர்ந்த சாதி குடும்பத்தைச் சேர்ந்தவராவார். இந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு பொதுவாக தங்கள் வீடுகளுக்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை என்பது பற்றி அவரது தாத்தா பாட்டிகளிடமிருந்து விஜே கதைகளைக் கேட்டு வளர்ந்து வந்தவராவார்.

கருத்துக்கணிப்பாளர்கள் களத்தில் இருக்கும்போது தனிப்பட்ட சார்பு மற்றும் தனிப்பட்ட மாறா நிலைகளைத் தவிர்க்குமாறு தனது கள மேற்பார்வையாளர் அனைவருக்கும் அறிவுறுத்தியமை விஜேக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அவர் இந்த வீட்டில் இருக்கக்கூடாது என்று கவலைப்பட்டு, இந்த சாதியைச் சேர்ந்தவர்களுடன் தனது தாத்தா பாட்டி சொன்ன கதைகளின் அடிப்படையிலேயே பேசினார். விஜே தனது சகாக்கள் அல்லது மேற்பார்வையாளர்களால் சார்புடையவராகக் கருதப்பட விரும்பவில்லை. மேலும் பங்கேற்பாளருடனான நேர்காணலை தெருவில் மேற்கொள்வதன் மூலம் அவரது மாறா நிலைகள் மற்றும் கள அறிவுறுத்தல்களுக்கு இடையில் சமரசம் செய்ய முடிவு செய்கிறார். அவ்வீட்டைச் சேர்ந்த பதிலளிப்பவர், கருத்துக் கணிப்பில் பங்கேற்பதை விட, விஜேவை தங்கள் வீட்டிற்கு மீண்டும் அழைத்து புத்துணர்ச்சிப் பானங்களை எடுக்குமாறு கேட்கிறார்கள். அதன் பின்னர், பங்கேற்பாளர் தெருவில் கருத்துக் கணிப்பை மேற்கொள்ள ஒப்புக்கொண்டு விஜேவின் கேள்விகளுக்கு தொடர்ந்து பதிலளிக்கிறார். பதிலளிப்பவர் படிக்காதவர் எனவும், அந்நபரின் சாதியை அடிப்படையாகக் கொண்டு பெரிதாக அறிவைக் கொண்டிராதவர் எனவும் கருதி, பங்கேற்பாளர் இப்பதில்களைத்தான் தெரிவிப்பார் என நினைத்து தாமே கருத்துக் கணிப்பில் பதில்களை விஜே நிரப்புகிறார்.



**முக்கிய குறிப்புகள்:**

- பங்கேற்பாளர்களுடனான தொடர்பின் போது கருத்துக்கணிப்பாளர்கள் தங்களது தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் தமது மாறா நிலைகளை உட்புகுத்த இடமளிக்கக் கூடாது. மேலும் ஒவ்வொரு பங்கேற்பாளரையும் சம அளவு மரியாதையுடன் அணுக வேண்டும்.
- கருத்துக்கணிப்பாளரானவர் பங்கேற்பாளர் சொல்வதை ஒருபோதும் மாற்றக் கூடாது. அத்துடன், எப்போதும் பங்கேற்பாளரது பார்வையை; பதில்களை அப்படியே பதிவு செய்ய வேண்டும்.
- பங்கேற்பாளரது பார்வைகளில்; பதில்களில் சந்தேகம் இருக்கும்போது, பங்கேற்பாளரைப் புரிந்துகொள்வதற்காக, தெளிவுபடுத்தும், சில கேள்விகளை கருத்துக்கணிப்பாளர் கேட்க வேண்டும்.
- தனிப்பட்ட நம்பிக்கைகள் அல்லது உணர்வுகள் காரணமாக ஒரு பங்கேற்பாளருடன் ஆய்வை நடத்துவதற்கு கருத்துக்கணிப்பாளர் சங்கடமாக உணர்ந்தால், கள மேற்பார்வையாளருடன் கருத்துக்கணிப்பாளர் கலந்துரையாடிய பின்னர் வேறு கருத்துக்கணிப்பாளர் அவ்வீட்டிற்கு வருகை தர வேண்டும்.

**விடயம் 5: பங்கேற்பாளர் விசாரணைகள்.**

அலெக்ஸ் (கற்பனையான பெயர்) ஒரு திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கருத்துக் கணிப்பை நிர்வகிக்க வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ள கிராமத்திற்குள் நுழைகிறார். அவர் நிலையான நெறிமுறையைப் பின்பற்றி கிராமத்திலுள்ள நகர மண்டபத்தை ஒரு அடையாளமாகத் (landmark) தேர்ந்தெடுத்து, வலது கை விதியின் அடிப்படையில் தனது வலதுபுறம் செல்லும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து, கணக்கெடுப்பை நிர்வகிப்பதற்காக தனது வலது புறத்தில் உள்ள முதல் வீட்டைத் தெரிவு செய்கிறார். தன்னை சுபா என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் வீட்டு உறுப்பினருடன் பேசி ஆய்வு நடத்த அலெக்ஸ் அனுமதி கேட்கிறார்.

ஆய்வில் பங்கேற்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும், ஆனால் அதைத் தொடங்குவதற்கு முன்பு அலெக்ஸிடம் சில கேள்விகள் கேட்க வேண்டி இருப்பதாகவும் சுபா கூறுகிறார். அலெக்ஸ் கணக்கெடுப்பைத் தொடங்க ஆர்வமாக உள்ளதுடன் சுபாவின் கேள்விகளுக்கும் பதிலளிக்க பணிவுடன் ஒப்புக்கொள்கிறார். சுபா அலெக்ஸிடம் கேள்விகளைக் கேட்கும்போது, அலெக்ஸ் பின்வருமாறு பதிலளிக்கிறார்

**கே: இந்த ஆய்வுக்கு யார் பணம் வழங்குகிறார்கள்? இது ஒரு அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனமா?**

ப: இந்த ஆய்வு ஆசிய மன்றத்தின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது, மேலும் அவர்கள் ருளுயுஐனு இன் உதவியைப் பெறுகிறார்கள்.

**கே: வெளிநாட்டினருக்கு இந்த தகவல்கள் ஏன் தேவைப்படுகிறது? சமூகத்திற்கு இதனால் என்ன நன்மை?**

ப: இந்தப் பகுதியில் சமூக மூலதனத்தின் ஒரு மாதிரியை உருவாக்க அவர்கள் உங்கள் பதில்களைப் பயன்படுத்துவார்கள். அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் இந்தச் சமூகத்திற்குள் மோதல் குறைப்பு தொடர்பான தலையீடுகளை கட்டமைக்க இது பயன்படுத்தப்படும்.

**கே: நாங்கள் செலவிடும் நேரத்திற்கு அவர்கள் ஏன் எங்களுக்கு பணம் கொடுப்பதிலை? நாங்கள் இலவசமாக தகவல்களை வழங்குவோம் என்று அவர்கள் எதிர்பார்க்கும் அதேவேளை அவர்கள் இதற்காக பணம் பெறுகிறார்கள்.**

ப: இது ஒரு கற்றலுக்கான பயிற்சி, இதை நடத்த அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர். ஆசிய மன்றமானது ஒரு இலாப நோக்கற்ற நிறுவனம் மற்றும் இந்தத் திட்டங்களிலிருந்து அது பணம் சம்பாதிப்பதில்லை. அவர்களின் அனுமதியுடன் நீங்கள் விரும்பினால் கண்டறிவுகள் பற்றிய அறிக்கையை உங்களுக்கு என்னால் வழங்க முடியும்.

**கே: நாங்கள் இங்கே மற்றவர்களுடன் நிம்மதியாக வாழ்கிறோம். நீங்கள் ஏன் இந்த விசித்திரமான கேள்விகளைக் கேட்டு மக்களைத் தூண்டிவிட முயற்சிக்கிறீர்கள்?**

ப: நாங்கள் வெறுமனே ஒரு கற்றலுக்கான பயிற்சியை நடத்துகிறோம். இப்பகுதியில் இப்போது அமைதி நிலவுகிறது என்பதை நாங்கள் பாராட்டும் அதேவேளை, இந்தச் சமூகம் எவ்வாறு சிறப்பாக செயல்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள விரும்புகிறோம். இதன்மூலம் பிற சமூகங்களில் இங்கு நாம் பெறும் கண்டறிவுகளைப் பயன்படுத்த முடியும்.

**கே: எனது பதில்கள் இரகசியமாக இருக்குமா? எனது பதில்களின் அடிப்படையில் எனக்கு சிக்கல்கள் ஏற்படுமா??**

ப: உங்கள் தனிப்பட்ட பதில்கள் யாவும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும். அனைத்து கண்டறிவுகளும் அநாமதேயமாக்கப்பட்டு ஒட்டுமொத்தமாகவே அறிக்கையிடப்படும். தனிப்பட்ட தகவல்கள் சரிபார்ப்பு நோக்கத்திற்காக மட்டுமே சேகரிக்கப்படுகின்றன. மேலும், அவை கருத்துக் கணிப்பின் முடிவுகளிலிருந்து வேறாக்கி வைக்கப்பட்டு பாதுகாப்பான அமைப்பொன்றால் பத்திரப்படுத்தப்படும்.



**முக்கிய குறிப்புகள்:**

- சில நேரங்களில் பங்கேற்பாளர்கள் ஆய்வின் சில அம்சங்கள் குறித்து கணக்கீட்டாளர்களை விரிவாகக் கேள்வி கேட்கலாம்.
- கருத்துக்கணிப்பாளர்கள் பொதுவாக கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை தங்களுக்குள் பயிற்சி செய்ய வேண்டும். அத்துடன், முடிந்தவரை எழுத்துப் பிரதிகளை உருவாக்க வேண்டும். பல்கலைக்கழகம் மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து எழுத்துப் பிரதிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும்..
- கேள்விக்கு நேரடியாக பதிலளிக்கவும், ஆனால் அதிகமான தகவல்களை வழங்குவதை அல்லது விரிவான விளக்கங்களை அளிப்பதைத் தவிர்க்கவும்.
- பொய் சொல்வதைத் தவிர்ப்பதுடன், சூழ்ச்சித் திறத்துடன் உண்மையைக் கையாள்வதைத் தவிர்க்கவும். நேர்மையாக

இருங்கள், ஆனால் குறிப்பிட்ட சிலவற்றில் வினைத்திறனாக இருப்பதைத் தவிர்க்கவும்.

- பங்கேற்பாளர் கேள்வி ஒன்றைக் கேட்கும்போது உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்கவும். உங்களுக்கு பதில் தெரியாவிட்டால், நீங்கள் கண்டுபிடித்து அவர்களுக்கு தெரியப்படுத்துவீர்கள் என்று அவர்களிடம் சொல்லுங்கள்.
- பங்கேற்பு தன்னார்வமானது என்பதில் தெளிவாக இருங்கள். கருத்துக் கணிப்புகளுக்காக பதிலளிப்பருக்கு ஊதியம் வழங்க கருத்துக்கணிப்பாளர்களுக்கு முடியாது. ஆனால், முன்னதாக பல்கலைக்கழகம் மற்றும் வாடிக்கையாளருடன் ஒப்புக் கொண்டிருந்தால் கருத்துக் கணிப்பின் பொதுக் கண்டறிவுகளை பதிலளிப்பவருடன் பகிர்ந்து கொள்ள முடியும்..
- சில கேள்விகள் மனதைப் புண்படுத்தக்கூடியதாக தோன்றலாம். ஆனால் பொறுமையாகப் பதிலளித்து தெளிவாக விளக்கவும். மேலும் தொடர்வதற்குக் கடினமாக இருந்தால், ஒரு வீட்டைத் தவிர்ப்பது எப்போதும் ஒரு தெரிவாகும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.